விலை : 20.00
பக்கங்கள் : முப்பத்து இரண்டு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 29 வெள்ளிக்கிழமை (14.08.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 238




# தேர்தலில் வெற்றி பெற்றாலும் மகிந்த பிரதமராக முடியாது

## கடிதம் மூலம் அறிவித்தார் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் பெரும்பான்மையுடன் வெற்றியீட்டினாலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷவிற்கு பிரதமர் பதவி வழங்கப்படாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். கடிதம் ஒன்றின் ஊடாக இந்த தகவலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷ விற்கு அனுப்பிவைத்துள்ளார். (30ஆம் பக்கம் பார்க்க)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்ற பொதுத்தேர்தல் - 2015



விடுதலைப் பயணத்தை தாங்கிச் செல்லும் பலமான குரலுக்கு வாக்களிப்போம்.

X 10

10



TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

இலங்கை தமிழ் அரசுக்கட்சி
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்

**சிவஞானம் சிறீதரன்**
M.Ed,B.A,PGDE(Mt),PGDEM,Sp.Tr(Ag)

தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியம்.
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-543)



## பாராளுமன்ற பொதுத்தேர்தல் வன்னி மாவட்டம் - 2015

### வன்னி வாழ் மக்களுக்கு அரிய தோர் சந்தர்ப்பம்

ஏழை மக்களின் எளிமையான தோழன் மஸ்தான்
கல்விக்கான சேவைகளை கருத்துடனே செய்துவிட்டீர்
ஏழைகள் வாழ்வின் உயர்வுக்காய் உரியபல பணிகள் செய்திடுவீர்
விவசாயிகளின் உதவிக்கரம் வாழ்க!
விவசாயிகள். உயர்வுக்கு உழைத்த சேவகன்
இன.மொழி. மதம் பாராமல் உழைத்த உத்தமன் மஸ்தான்.
மக்கள் சேவை மகத்தான சேவையென செய்து வந்தவர்
வன்னியிலே இன்னும் பல மகத்தான சேவைகளை செய்துள்ளார்.
மனமுவந்து வாக்குகளை அளித்திடுவீர் மஸ்தானுக்கே
நாட்டுக்காய் சேவை செய்த மஸ்தான் அவர்களை பாராளுமன்றம் அனுப்பிடுவீர்
வெற்றிலை சின்னத்தில் மூன்றாம் இலக்கமது மஸ்தான் என நினைத்திடுங்கள்
மகத்தான பணிக்காக மஸ்தானுக்கு வாக்களியுங்கள் வெற்றி நிச்சயம்.
மறக்காமல் மகத்தான சேவை செய்ய அனுப்பிடுவீர் - வாக்குகளை
எதிர்காலம் சிறக்க ஏழைகள் வாழ்வுயர வழங்கிடுவீர் வாக்குக்களை
நம்பிக்கையின் சின்னமாய் மாமனிதர் மஸ்தானை ஆதரிப்போம்
அவரது சேவைகளை அறிந்து உண்மையான வாக்குக்களை
வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.



X 3

S.K காதர் ஹாஜியாரின்
சமூகசிரோன்மணி அவர்களின் புதல்வன்

**கே.கே. மஸ்தான்**

(146)

வாக்குகளைப் போடுங்கள் வாக்குறுதிகள் நிறை வேற்றப்படும் நலன் விரும்பிகள்


# நிறைவேற்று அதி...

யும்? மகிந்த சிந்தனையில் கூறப்பட்டதையே அவரால் நிறைவேற்ற முடியவில்லை. இதற்கு அவருக்கு போதியளவு சந்தர்ப்பங்கள் இருந்தன. அவர் அதனை செய்யவில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழித்தல், தேர்தல் முறைமாற்றம், சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்தல் போன்றவை நல்லாட்சியின் முக்கிய விடயங்கள். அது தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன எதிர் காலத்தில் முழுமையாக நிறைவேற்றப்படும். எவ்வாறெனினும் நல்லாட்சி மூலம் நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களை மக்கள் உணரக் கூடியதாக உள்ளது.

இந்த நாட்டில் இரண்டு கோடி மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் பல்வேறு கருத்துக்களைக் கொண்டவர்கள். தன்னிச்சையான செயற்பாடுகள் அடக்குமுறை இந்த நாட்டுக்குச் சரிவராது.

இப்போது மக்கள் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிட சுதந்திரமுள்ளது. எம்முடன் நல்லாட்சியில் 100ற்கும் அதிகமான கட்சிகள், அமைப்புகள் ஒன்றிணைந்துள்ளன. அவர்களின் கருத்துக்கள் பெறப்படுகின்றன. யார் ஆட்சிக்கு வந்தாலும் மக்கள் பலமே முன்னிறுத்தப்பட வேண்டும். நாட்டில் மாற்றம் ஏற்படும என்ற நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

நாட்டின் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதும் அடக்குமுறையும் ஒன்றல்ல. சிங்கப்பூரைக் கட்டியெழுப்ப லீகுவாங்யூ சட்டங்களை சரியாக நடைமுறைப்படுத்தினார். அதன் மூலம் அபிவிருத்தியை மேற்கொண்டார்.

இலங்கையில் பாதாள உலகக் குழு போன்றவையை சட்டத்தை நடைமுறைப்படுத்தி ஒழிக்கப்பட வேண்டியவை. சட்டமும் அடக்குமுறையும் ஒன்றாகப் பார்க்கப்படக் கூடாது. அதேவேளை சட்டம் அனைவருக்கும் சமமானதாக அமுல்படுத்தப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை கடந்த காலங்களில் சட்டம் இல்லாதொழிக்கப்பட்டு அடக்குமுறையே தொடர்ந்தது.

இப்போது பாதாள உலகக் குழுவின் செயற்பாடுகள் தேர்தலில் வெளிப்படுவதாகவும் கூறப்படுகிறது. இதை சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்தி கட்டுப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

இலங்கைக்கு இப்போதும் போதைப் பொருள் கொண்டுவரப்படுகிறது. இவற்றை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும் புதிய அரசாங்கம் 8 மாதங்களில் அனைத்தையும் செய்ய முடியாது.

குறிப்பாக தேர்தல் காலங்களில் அமைச்சர்கள் மற்றும் வேட்பாளர்கள் பாதாள உலகக் குழுவை தமக்கு நெருக்கமாக வைத்துக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். இன்றுள்ள தேர்தல்முறை மாற்றப்படுவதும் இதில் முக்கியமாகிறது.

போதைப் பொருள் விற்றாவது பணம் தேடி செலவழிக்க வேண்டி நிலையே இப்போதுள்ளது. இவை நிறுத்தப்பட வேண்டியது முக்கியமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-12)


## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள நிசான் ஜப்பான் ஜீப் **(04 wheel) Model X-TRAIL** நம்பர் **KD XXXX** விற்பனைக்கு உண்டு. குளிரூட்டல் வசதி, தொலைக்காட்சி வசதி என்பன உள்ளடங்கிய நிசான் ஜப்பான் ஜீப்.

தொடர்புகளுக்கு: 0776047073 0713576476

பார்வையிடும் நேரம்:-
காலை 9.00 - மாலை 6.00 வரை

(1475)



## வில்லிசை நிகழ்ச்சி

சாம்பல்தீவு திருகோணமலை வடலியம்பதி பிள்ளையார் ஆலய பூங்காவனத் திருவிழாவிலே சிறுப்பிட்டியூர் கலைஞான மாமணி சத்தியதாஸ் குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சி இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

(1480)



## நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...



# மைத்திரியின் வெற்றிலைச்சின்னம்

அன்பான என் அருமை தம்பிமாரே, தங்கைமாரே, பெரியார்களே உங்களது இன்றைய வாழ்க்கை நிலையினை நான் நன்கு அறிவேன். என் கையை பலப்படுத்துங்கள். உங்களுக்கு கரம் கொடுத்து தூக்கவும் உங்கள் மீது அக்கறை காட்டவும் நான்இருக்கின்றேன்.

எந்தக்கட்சி ஆட்சி அமைத்தாலும் ஜனாதிபதியின் ஆசீர்வாதமும் ஆதரவும் எனக்கிருப்பதால் அமையப்போகும் புதிய அமைச்சரவையில் ஜனாதிபதியின் பிரதிநிதியாக நான் நிச்சயம் இடம்பெறுவேன். ஒரே ஒருமுறை நீங்கள் என்னை வெற்றி பெறச் செய்யுங்கள்.

அதன் பின்னர் அடுத்த தேர்தலில் நீங்களே என்னை வெற்றி பெறச்செய்யும் அளவிற்கு எனது சேவையினை கறைபடியாத கரங்களோடு நேர்மையுடன் உங்களுக்கு வழங்குவேன்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு இன்றோ நாளையோ நடைபெறக்கூடிய விடயம் இல்லையென்ற யதார்த்தத்தினை நீங்கள் நன்கு அறிவீர்கள். தீர்வை நாம் எட்டும் வரையிலும் நமது இனத்தின் இருப்பு என்பது மிக முக்கியம்.

நிலையான பொருளாதார கட்டமைப்பினை கொண்டிராத இனத்தின் இருப்பு என்பது கால ஓட்டத்தில் கேள்விக்குரியதே. ஆகவே தீர்வை நாம் எட்டும் வரையிலும் இனத்தின் இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்கு தேவையான நிரந்தர பொருளாதார கட்டமைப்பு கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்க்கை மேம்பாட்டிற்காக உண்மையுடன் உங்களுக்காக உழைப்பேன்.

எதிர்வரும் 17ம் திகதி தேர்தல் தினத்தன்று உங்கள் குடும்பத்திலிருந்து எனக்கு ஒரு வாக்கினை அளித்து நடைபெற்ற ஆட்சி மாற்றத்தின் பலனை அடைவதற்கு நீங்களும் காரணமாக இருங்கள்.

ஆயிரக்கணக்கான எனது ஆதரவாளர்கள் எனக்கு வாக்களிப்பார்கள். அதே போன்று ஏனைய வாக்காளர்களே, நீங்கள் எந்தக் கட்சிக்கு வாக்களிப்பது என்பதை ஏற்கனவே தீர்மானித்திருப்பீர்கள். நீங்கள் யாருக்கு வாக்களித்தாலும் பரவாயில்லை ஆனால் உங்கள் இல்லத்திலிருந்து எனக்கு ஒரே ஒரு வாக்கை அளித்து என்னை வெற்றி பெறச் செய்து பாருங்கள்.

உங்கள் குடும்பத்திலிருந்து எனக்கு ஒரு வாக்களிப்பதால் உங்களுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது. எனது வெற்றியை உங்களது ஒரு வாக்கால் தயவு செய்து உறுதிப்படுத்துங்கள்.


இளைஞர்களின் எதிர்காலத்தை என்னிடம் ஒப்படையுங்கள்.!

இப்படிக்கு

அங்கஜன் இராமநாதன்

**வெற்றிலைச் சின்னத்திற்கும்**
**இலக்கம் 1 இற்கும் வாக்களியுங்கள்**

X 1



(சி-518)

புதிய நாடு – புதிய தலைவர் – புதிய தலைமுறை – புதிய எதிர்பார்ப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email: Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# தேர்தல் கண்காணிப்பில் 13 ஆயிரம் பணியாளர்

## பப்ரல் அமைப்பு தகவல்

(கொழும்பு)

**எதிர்வரும் 17-ம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் நாடு முழுவதுமுள்ள வாக்களிப்பு நிலையங்களில் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட சுமார் 13 ஆயிரம் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சுதந்திரமானதும் அமைதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (பப்ரல்) தெரிவித்துள்ளது.**

கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின்போது அந்த அமைப்பு இதனை தெரிவித்துள்ளது. (செ-11)

# வான் - சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் பலி; சாரதி சரண்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மீசாலை பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு சைக்கிளில் சென்ற குடும்பஸ்தரை மோதி அவர் பலியாகக் காரணமாகவிருந்த வான் ஒன்றின் சாரதி, நேற்று வியாழக்கிழமை பொலிஸில் சரணடைந்துள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில், அதேயிடத்தைச் சேர்ந்த வினாசித்தம்பி தெய்வநாதன் (வயது 40) என்ற 3 பிள்ளைகளின் தந்தை உயிரிழந்திருந்தார்.

அதேவேளை தப்பிச் சென்ற வாகனம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது, மோதிய வான் சாரதி பொலிஸில் சரணடைந்துள்ளார். (செ-60)

# தேர்தல் பரப்புரை யாவும் இன்று நள்ளிரவுடன் நிறைவு

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்ற தேரதலுக்கான அனைத்து பரப்புரை நடவடிக்கைகள் யாவும் இன்று நள்ளிரவுடன் முடிவடைகின்றது.

இன்று நள்ளிரவுக்கு பின்னர் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை கைதுசெய்யுமாறு, பொலிஸ்மா அதிபருக்கு தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், வேட்பாளர்களால் தத்தம் தொகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் காரியாலயங்கள் அனைத்தும், நாளை அகற்றப்பட வேண்டுமெனவும் தேரதல்கள் ஆணையாளர் உத்தரவிடடுள்ளார்.

குறித்த சட்டவிதிகளை மீறி செயற்படும் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீது, சட்ட நடவடிக்கை எடுக்குமாறு, அறிவுறுத்தப்பட்டுள்ளது. (செ-12)

# சமஷ்டி முறை ஆட்சியை முற்றாக எதிர்க்கிறேன்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

சமஷ்டி முறைமை ஆட்சியை முற்றாக எதிர்க்கின்றேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

2005-ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுபபிள்ளை பிரபாகரன் முன்வைத்த சமஷ்டி முறைமை ஆட்சியை தாம் நிராகரித்ததாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணியில தேர்தலில் வெற்றியட்டுவோம் என நன்கு தெரிந்து கொண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இரகசிய ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தி சமஷ்டி முறைமை ஆட்சியை வழங்க இணங்க வேண்டிய தேவை கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# கோத்தபாயவுக்கு தடை நீக்கம்

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட மூன்று பேருக்கு வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டிருந்த தடை ஒரு மாதத்திற்கு தளர்த்தப்பட்டுள்ளது.

காலி துறைமுகத்தில் மிதக்கும் ஆயுத களஞ்சியம் ஒன்றை நடத்தியமை தொடர்பில் நடத்தப்படும் வழக்கு விசாரணையின் அடிப்படையில் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட மூவருக்கு வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# மகிந்தவுக்கு எதிரான வழக்கு கொழும்பு நீதிமன்றில் இன்று

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான வழக்கு கொழும்பு பிரதான நீதிமன்றில் இன்று வெள்ளிக்கிழமை விசாரணை செய்யப்படவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்து அரசாங்கத்திற்கு பாரியளவில் நிதி நட்டத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

சட்டத்தரணி கெலும் குமாரசிங்க என்பவரினால் நேற்று முன்தினம் இந்த மனு கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# தேர்தலை முன்னிட்டு இராணுவம் தயார்



(கொழும்பு)

தேர்தல் காலப்பகுதியில் சட்டம் மற்றும் சமாதானத்தை நிலைநாட்ட பொலிஸார் கோரிக்கை விடுத்தால் அவர்களுக்கு ஆதரவு வழங்க படையினர் ஆயத்தமாக இருப்பதாக இராணுவ ஊடக பேச்சாளர் பிரிகேடியர் ஜயனாத் ஜயவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பு மற்றும் பிறபகுதிகளில் அமைந்துள்ள இராணுவ முகாம்களில் படையினர் தயார் நிலையில் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க மகிந்த விருப்பம் தெரிவிக்கவில்லை

## இப்போது மட்டும் அதை பேசி வருகிறார் – சோபித தேரர்

(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதிமுறையை இல்லாதொழிப்பது தொடர்பில் நாம் பலமுறை வலியுறுத்தியும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதனைச் செய்யவில்லை என மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்தார்.

நாட்டில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்குப் பதிலாக அடக்குமுறையே தலைதூக்கியிருந்தது.

இப்போது நாட்டில் மக்கள் உணரக்கூடிய மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

அதிகாரத்தில் இருக்கும் போது செய்ய முடியாததை இப்போது அதிகாரம் இல்லாத போது எவ்வாறு செய்ய முடியும் என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர். இது நல்லாட்சிக்கான ஆரம்பம்தான் நிச்சயம் மாற்றம் உறுதியே என்றும் அவர் தெரிவித்தார்.

நல்லாட்சி தொடர்பிலும் கடந்த கால ஆட்சி பற்றியும் கருத்துத் தெரிவித்த அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது.

மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் நின்ற போது நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்க வேண்டும் என்பதில் ஐக்கிய தேசியக் கட்சியும் இணங்கியிருந்தது. எம்மோடு அவர்களும் உடன் படிக்கையில் கையொப்பமிட்டனர்.

ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ அதிகாரத்தில் இருந்த போது நாம் எட்டுத்தடவைக்கு மேல் இதனை வலியுறுத்தினோம். அவர் அதற்கு இணங்கவில்லை. இப்போது அது பற்றி அவர் பேசி வருகிறார்.

அதிகாரத்தில் இருந்த போது முடியாததை அதிகாரம் இல்லாத போது எவ்வாறு நிறைவேற்ற முடி

02ஆம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Valampuri 005.pdf 1 8/14/2015 1:02:12 AM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையிலும் முஸ்லிம் தீவிரவாத அமைப்பான

# ஐ.எஸ்.இன் கொள்கைகள் வேரூன்ற ஆரம்பித்துவிட்டன

## பொது பலசேனா அச்சம்

**இலங்கையில் முஸ்லிம் தீவிரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ். இன் கொள்கைகள் வேரூன்ற ஆரம்பித்துவிட்டதையே அவ் அமைப்பு வெளியிட்டுள்ள வரைபடம் நிரூபித்துள்ளது எனத் தெரிவிக்கும் பொது பலசேனாவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டிலந்த விதானகே, இது தெரிந்தும் ஆட்சியாளர்கள் தெரியாதவர்கள் போல் மௌனம் காப்பது நாட்டுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்றும் அச்சம் வெளியிட்டுள்ளார்.**

இது தொடர்பாக டிலந்த விதானகே மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் முஸ்லிம் அடிப்படைவாதம் ஏற்கனவே தலை தூக்கியுள்ள நிலையில் இன்று ஐ.எஸ்.ஐ.ஸ் அமைப்பும் தமது இஸ்லாமிய இராச்சியங்களுக்கான வரைபடத்தில் இலங்கையையும் இணைத்துள்ளது.

இலங்கைக்குள் ஐ.எஸ்.ஐ.எஸ். முஸ்லிம் தீவிரவாதிகளின் கொள்கைகள் வேரூன்றியுள்ளதை இது வெளிப்படுத்தியுள்ளது. எனவே இது மிகப் பயங்கரமான நிலைமையாகும்.

ஆட்சியாளர்களுக்கு இது தெரியும். ஆனாலும் தெரிந்தும் தெரியாதது போல மௌனம் காக்கின்றனர். இது நாட்டுக்கு ஆபத்தானதாக அமையும்.

இத் தீவிரவாத அமைப்பின் கொள்கைகள் நாட்டுக்குள் வேரூன்ற ஆரம்பித்து விட்டது. இது தொடர்பாக அரசாங்கம் தேடிப்பார்த்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் டிலந்த விதா னகே மேலும் தெரிவித்துள்ளார்.(இ-7)


## ராஜபக்ஷ குடும்பத்தின் முன்னேற்றத்திற்காகவே யுத்தத்தின் பின்னர் அனைத்து செயற்பாடுகளும்

(கொழும்பு)

யுத்தம் முடிந்த பின்னர் ராஜபக்ஷ என்ற தனியொரு குடும்பத்தின் முன்னேற்றத்தை அடிப்படையாக வைத்தே அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. இதற்கு ஜனவரி 8 ஆம் திகதி முற்றுப்புள்ளி வைத்தோம். அந்த பயணத்தை தொடர எதிர்வரும் 17 ஆம் திகதி ஐ.தே.முன்னணியை வெற்றிபெறச் செய்வோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிவில் சமூகத்தை பலப்படுத்தி பாராளுமன்றத்தை அரசியலமைப்பு சபையாக மாற்றுவதன் மூலமே மீண்டும் இந்நாட்டில் குடும்ப ஆட்சி தலைதூக்குவதை தகர்க்க முடியுமென்றும் பிரதமர் தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள வோட்டர்ஸ் எஜ் ஹோட்டலில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஐ.தே.முன்னணியின் தொழில் சார் நிபுணர்களுடனான சந்திப்பில் உரையாற்றும் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.



பிரதமர் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

1983 இலும் யுத்தக்காலத்திலும் நாடு பின்னடைவைக் கண்டது. மக்கள் கஷ்டப்பட்டனர். ஆனால் இவையனைத்திலும் இருந்து மீட்சி பெற்று பொருளாதார ரீதியாக நாட்டை கட்டியெழுப்பவும் மக்களை முன்னேற்றுவதற்கும் சந்தர்ப்பம் யுத்தம் முடித்த பின்னர் கிடைத்தது.

ஆனால் நாட்டையும் மக்களையும் பொருளாதாரத்தையும் அபிவிருத்தி செய்வதை முழுமையாக கைவிட்ட மகிந்த ராஜபக்ஷ தனது சகோதரர்களையும் குடும்பத்தையும் முன்னேற்றுவதை அடிப்படையாக வைத்தே அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்தார். நாட்டையும் மக்களையும் நடுத்தெருவில் கைவிட்டார்.

இதிலிருந்து கடந்த ஜனவரி 8 ஆம் திகதி சிவில் சமூகம் ,தொழில் சார் நிபுணர்கள் உட்பட பலர் இணைந்து நல்லாட்சிக்கான புதிய புரட்சியை ஏற்படுத்தினோம். அதன் பின்னர் மைத்திரிபால சிறிசேனவை நாட்டின் ஜனாதிபதியாக்கி நல்லாட்சியை தொடர்ந்தோம்.

அந்த நல்லாட்சியின் இரண்டாம் கட்ட பயணம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அதற்காக மீண்டும் நாம் இங்கு இன்று ஒன்றிணைந்துள்ளோம்.

60 மாதங்களில் புதிய நாட்டை கட்டியெழுப்பும் எமது [illegible] தங்களது ஒத்துழைப்பு [illegible] எமக்கு தேவையாகும்.

தெற்காசியாவில் முதன்முறையாக எமது நாட்டில் சமூக பொருளாதார சந்தை வாய்ப்பு பொருளாதார கொள்கையை எமது திட்டத்தில் முன்வைத்துள்ளோம்.

இக்கொள்கையோடு புத்தர் போதித்த லெச்சவி ஆட்சி முறையையும் இணைத்து எமது எதிர்கால ஆட்சி அமையும். நாசிவாதத்தின் பின்னர் கிறிஸ்தவ சக்திகளால் இப்பொருளாதார முறை உலகில் முன்னெடுக்கப்பட்டது.

இன்று தெற்காசியாவில் இந்து , முஸ்லிம் மதங்களுக்குள்ளும் இந்த ஜனநாயக மரபுகளுடனான பொருளாதாரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தேர்தலுக்கு பின்னரான பாராளுமன்றம் அரசியல் வாதிகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் அதனை அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய அரசியலமைப்பு சபையாக மாற்றுவதே எமது கொள்கையாகும்.

இதற்காக கூட்டுக்கிராமங்களை உருவாக்கி சிவில் அமைப்புக்களை பலப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆட்சியை முன்னெடுக்க ஆலோசனைகள் பெறப்படும்.

இதன் மூலமே எதிர்காலத்தில் தனிக்குடும்ப ஆட்சி நாட்டில் தலையெடுக்காது தடுக்க முடியும். அமெரிக்காவில் இங்கிலாந்தில் ஐரோப்பிய நாடுகளில் எந்தவிதமான ஆட்சி முறைகள் பின்பற்றப்பட்டாலும் பலமுள்ள சிவில் சமூகங்களை இதனோடு இணைத்து ஆட்சி முன்னெடுக்கப்படும். சிவில் அமைப்புக்கள் பலப்படுத்தப்பட வேண்டிய அதேவேளை திறமையான நிர்வாகத்தினர் தெரிவு செய்யப்பட வேண்டும்.

மகாராஜாவை சுற்றி சுற்றி வருவதால் ஆட்சியில் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மைகள் கிடைக் காது [illegible] அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### மாருதப்புரவீகம் மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையின் கீழ் தெல்லிப்பழை பிரதேச செயலக ஒழுங்கமைப்பில் கல்ாசார அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்டு மாருதப்புரவீகம்–11 (பண்பாட்டு மலர்) மலர் வெளியீடு செய்யப்படவுள்ளமையால் எமது பிரதேச செயலக பிரிவிற்குட்பட்டவர்கள் பண்பாட்டு மலரிற்கான தங்களது ஆக்கங்களை பிரதேச செயலக கலாசாரப்பிரிவில் 2015.08.31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது என பிரதேச செயலாளர் கே.சிறிமோகனன் அறிவித்துள்ளார். (இ)

## இன்று ஒரு தகவல்

### நரக அசுரனும் சொர்க்க தேவனும்!

இருளில் இருந்து வெளிச்சத்திற்கு வருவதுதான் வாழ்வின் நோக்கமே!எப்படி? தாயின் கர்ப்பத்தில் நாம் இருந்தபோது அங்கு வெளிச்சம் இருந்திருக்குமா? சூரிய ஒளி புகாதபடி இருட்டானது கருவறை...அதில் இருந்து பூமியின் வெளிச்சத்தில் வந்து விழுந்தவர்கள் நாம். இதையே பிறப்பு...வாழ்வின் ஆரம்பம்...என்று கொண்டாடுகிறோம்.ஆண்டுதோறும் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம் இல்லையா?

பூமியில் வெளிச்சத்தில் வாழ்ந்தாலும் நாம் இன்னோர் இருட்டில்தான் இருக்கிறோம்.அது அறியாமை என்கிற இருள்.அந்த இருட்டில் இருந்து வெளியே வந்து அதையும் கொண்டாட வேண்டாமோ? அந்தக் கொண்டாட்டம்தான் தீபாவளி.

அறியாமை-மடமை நம்மைக் கொண்டு போய்ச் சேர்க்கிற இருளுக்குப்பெயர் நரகம் என்று புராணங்கள் சொல்லுகின்றன.நரகத்தை இருள் என்று நான் மட்டும் சொல்லவில்லை.தெய்வப்புலவர் திருவள்ளுவரே சொர்க்கம்,நரகம் என்பதை விளக்கும்போது ‘‘அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்து விடும் ’’ என்று பாடுகிறார்.

அமரருள் என்பது அமரர் அதாவது தேவர்கள் வாழும் சொர்க்கம் என்றும் ஆர் இருள் என்பது நரகம் என்றும் பொருள்படும்.

புத்தமதத்தில் ஜென் என்கிற பிரில் ஓர் அழகான கதை உண்டு! உயர்ந்த ஜென் துறவி ஒருவர் மரத்தடியில் வீற்றிருந்து சீடர்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தார்.அந்த வழியாக வந்த அந்த நாட்டுச் சேனாதிபதிக்கு மனத்தில் நீண்டநாளாக ஒரு சந்தேகம்.துறவியின் முன் மண்டியிட்டுத் தம் சந்தேகத்தைக் கேட்டார்.

“ஐயா சொர்க்கம், நரகம் என்பது உண்மையா? அது எங்கே இருக்கிறது.எனக்குக் காட்ட முடியுமா?

“அது இருக்கட்டும்...நீ யார்? என்ன செய்து கொண்டிருக்கிறாய்?’’ என்று கேட்டார் புத்ததுறவி.

“நான் இந்த நாட்டின் சேனாதிபதி’’ என்று கர்வமாகப் பதில் கூறினான் வீரன்.

கேலியாகச் சிரித்த துறவி,‘‘ நீயா ...தளபதியா... உன்னைப் பார்த்தால் கசாப்புக்கடையில் ஆடு வெட்டுகிறவன் மாதிரி இருக்கிறது? நீயா சேனாதிபதி’’ என்று கிண்டல் செய்தார்.

வெறிபிடித்த கோபத்துடன் பல்லைக் கடித்தபடி வாளை உருவித் துறவியைக் கொல்ல நெருங்கினான் வீரன். கோரமான கோபமான அவன் முகத்தை நோக்கி விரலை நீட்டிய படி துறவி “இது தான் நரகம்’’ என்றார்.

கோபத்தைவிடக் கொடிய நரகம் இல்லை என்பதைத் தனக்கு புரிய வைக்கவே சந்நியாசி இவ்வாறு கேலி செய்தார் என்பது சேனாதிபதிக்கு உறைத்தது. வெட்கப்பட்டு வாளைக் கீழே போட்டான்.புத்த சந்நியாசி திருவடிகளில் விழுந்தான்.கண்களில் கண்ணீர் திரண்டது.‘‘சுவாமி...என்னை மன்னிக்க வேண்டும்.உங்களைக் கொலை செய்யக்கூடிய அளவு என் கோபப் பேய் என்னை ஆட்டுவிக்கிறது...எனக்கு நரகத்தைக் காட்டினீர்கள்.நல்ல வேளை...ஒரு கணத்தில் நான் காப்பாற்றப்பட்டேன்’’ என்று அவரது கால்களைக் கண்ணீரால் கழுவினான் தளபதி.

கருணையோடு அவன் முகம் நோக்கித் துறவி சொன்னார்.‘‘ மகனே! இதுதான் நீ கேட்ட சொர்க்கம்’’ என்று நமது சொர்க்கத்தையும் நரகத்தையும் நாம்தான் கட்டுகிறோம்.நண்பர்களே...நர்காசுரனை சத்யபாமா கொன்றதைக் கொண்டாடினால் போதாது...நமது நரக எண்ணங்களை நமது சத்தியத்தின் பலத்தால் கொன்று விளக்கேற்றுவோம்...அதுதான் உண்மையான தீபாவளி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் - 2015
# யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்

## என் தந்தைக்கு உயிரூட்டிய கணேஷ்வரன் ஐயா



எங்களுடைய நலன்புரி முகாமில் இருதய நோயினால் பாதிப்புற்று ஒருவர் சமீபத்தில் இறந்தார். என்னுடைய அப்பாவும் இருதய நோயினால் பாதிப்புற்றுள்ளார். அப்பார் பெயர் சிவன் ரட்ணசாரா.

50 வயது. மீன் வியாபாரி. அந்த மரணச் செய்தியினால் என் மனம் உற்சாகமில்லாத நிலையில் இருந்தது. தந்தையைப் பற்றிய தவிப்பு என்னை மட்டுமல்ல குடும்பத்தவர்கள் அனைவரையும் வாட்டியது. சத்திர சிகிச்சையின் மூலம் தந்தையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பெரிய தொகைப் பணம் இல்லையே என நாளெல்லாம் நொந்து கொண்டிருந்தோம்.

ஊரிலுள்ள அத்தனை அரசியல்வாதிகளிடமும் சென்று முறையிட்டோம். அப்போது எப்பொழுதும் அரசியல்வாதிகள் பயன் படுத்தும் சொல்லான 'பார்ப்போம்" என்கின்ற பரீச்சயமான சொல்லைக் கூறி வழியனுப்பி வைத்தார்கள்.

ஒண்ணுமே நடக்கவில்லை. அவர் தருவர் இவர் அவர் தருவார் என்று நாங்கள் கணக்குப் போட்டுப் பார்த்ததே தான் மிச்சம்.

முகாமில் சமீபத்தில் இறந்த மனிதர் பணவுதவியின்றித்தான் இறந்தார். யாராவது சரி கருணை உதவி செய்திருந்தால் அந்த மனிதரும் உயிரோடு இருந்திருப்பார். இப்படி உதவி செய்வதற்கு யார் இருக்கிறார்.

அப்படி என்றால் 1000 ஒருவராக இருக்கவில்லையெனில் அபூர்வத்தில் ஒருவர் இருக்கத் தானே செய்வார். ஆனால் அவ்வாறு அபூர்வத்தில் ஒருவர் இருப்பாராயின் அவர் கடவுளால் அனுப்பப்பட்ட ஒருவராகத் தான் இருப்பார்.

எங்கள் முகாம் வருகை தந்த கணேஷ்வரன் ஐயாவிடம் அப்பாவின் நோய் குறித்து முறையிட்டோம். நாங்கள் எதிர்பார்க்கவில்லை. எங்களுக்கே ஆச்சரியமாக இருந்தது. அப்பாவுடைய சிகிச்சைக்காக முழுப் பணத் தொகையையும் தருவதாக உறுதியுடன் தெரிவித்தார். அதற்காக உடன் இரண்டு இலட்சம் ரூபா தந்தார்... யாழ்ப்பாணத்தில் தனியார் வைத்திய சாலையில் 08-09-2015 ஆம் திகதி சத்திரசிகிச்சை நடைபெறவுள்ளது.




இந்தக் காலத்தில் பத்துப் பைசா கொடுக்க மனமில்லாமல் இருண்மையுள்ளம் படைத்தவர்கள் வாழும் காலத்தில் இவ்வளவு பெரிய தொகையை அப்பாவின் வைத்திய செலவுக்காக ஐயா கொடுத்துதவியுள்ளார். ஐயாவுக்கு கோடி புண்ணியம் கிடைக்க வேண்டும்.


ஐயா குடாநாட்டில் புது மாற்றத்தை கொண்டு வரவேண்டும் என்ற அடிப்படையில் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளார்.

ஐயாவும் ஐயாவுடைய அணியும் குடாநாட்டில் மகத்தான வெற்றியை ஈட்டும் என எல்லா மக்களும் மகிழ்ச்சியுடன் பரப்புரை செய்கின்றார்கள். அவருடைய வெற்றி ஏழை மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்கும் யாழ்.குடாநாட்டுக்கு புது வெளிச்சத்தைத் தருவதற்கும் புதிய அரசியல் கலாசாரத்தை தோற்றுவிப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**அன்புடன் : மகள்**
**நலன்புரி நிலையம்**
**மல்லாகம்,**
**கோணப்புலம் முகாம்.**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பாராளுமன்றத் தேர்தல் – 2015

# வீணைக்கு வாக்களிப்போம்!



மக்களைக் கைவிட்டு எங்கும் ஓடாமல்
மக்களின் துயர் துடைத்தவர் யார்...?
அழிந்து போன எம் தேசத்தை
அபிவிருத்தியால் தூக்கி நிறுத்தியவர் யார்...?
நடைமுறை யதார்த்த வழி நின்று
தமிழர் அரசியல் உரிமைக்காக
அயராது உழைப்பவர் யார்...?
அது
**மக்களின் தலைவர்**
**டக்ளஸ் தேவானந்தா...!**





**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)**

Valampuri 001.pdf 1 8/13/2015 2:31:43 PM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத் தேர்தல் - 2015

யாழ் தேர்தல் மாவட்டம்




யாழ், கிளிநொச்சி மாவட்ட
எனது அன்பிற்குரிய தமிழ் மக்களுக்கு
**அப்பாத்துரை விநாயகமூர்த்தி** ஆகிய
எனது அன்பான வேண்டுகோள்.

கடந்த காலங்களில் எனக்கு ஆதரவு அளித்து என்னை வெற்றி பெறச் செய்த அனைத்து மக்களும் நடைபெற இருக்கும் பாராளுமன்றத் தேர்தலில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்தில் இலக்கம் 7 இல் போட்டியிடும் **தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கு** வாக்களித்து அவரை அமோக வெற்றியடையச் செய்யுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றேன்.

இவ்வண்ணம்
**அ.விநாயகமூர்த்தி**
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், பிரபல சட்டத்தரணி)






**7**

**திரு.தர்மலிங்கம் சித்தார்த்தன்**

**தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

**யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்**

அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கச் செய்யப்பட்டோர் பிரச்சினை, உண்மையான மீள்குடியேற்றம், இராணுவத்தினரை வெளியேற்றுதல், போன்ற பிரச்சினைகளை முன்னெடுத்துச் செல்ல...

எம்மினத்தின் விடுதலைக்கான குரல் பாராளுமன்றத்திற்குள்ளேயும் வெளியேயும் சர்வதேச மட்டத்திலும் ஓங்கி ஒலித்திட...

சிங்கள பௌத்த தலைமைகளின் சூழ்ச்சிகரமான நாசகார வேலைகளை முறியடித்து சர்வதேசத்தின் உதவியுடன் எம்மினத்தின் விடுதலையை வென்றெடுக்க...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சக்திமிக்க சட்டவலுவுள்ள கட்சியாக உருவாக்க...

சர்வதேச சூழலைக் கருத்திற்கொண்டு எமது விடுதலைப் பயணத்தை முன்னெடுத்துச் செல்ல....

எமது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சர்வதேச அழுத்தம், சர்வதேச மத்தியஸ்தம் என்பவற்றைத் தொடர்ந்தும் உறுதியுடன் வலியுறுத்த...

இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் இறையாண்மையும் சுயநிர்ணய உரிமையும் அங்கீகரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கக்கூடிய 20வது வயதிலேயே எமது இனத்தின் விடுதலைக்காகப் போராடக் களம்புகுந்த


**உங்கள் வீட்டுப் பிள்ளை**



**சுரேஸ் க.பிறேமச்சந்திரன்**

M.A (Pol Sc)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பாராளுமன்ற தேர்தல்-2015

யாழ். மாவட்ட தேர்தல் தொகுதி

"கல்வி கலாசாரம் மேலோங்க தன்மானம் ஆன்மீகம் நிலைபெற சுதந்திரம் மனித உரிமைகள் கிடைத்திட ஒன்றிணைந்து ஒருமைப்பாட்டுடன் செயற்படுவோம்"



X

5 3

**ஐக்கிய தேசியக் கட்சி**

**இரவீந்திரன் துஜீபன்**
(புனர்வாழ்வு பெற்ற முன்னாள் மருத்துவப் போராளி)

**திருமதி விஜயகலா மகேஸ்வரன்**
(முன்னாள் மகளிர் விவகார பிரதி அமைச்சர்)

---

## பாராளுமன்றத் தேர்தல் - 2015

சோரம் போகாத நேர்மையான தலைமைத்துவம்,
நல்லாட்சிக்காக ஒன்றிணைவோம் !



**நா.சிறிகரன்**
**EROS**

6

ஈழவர் ஜனநாயக முன்னணி
யாழ்.மாவட்டம்

X 6

(102)

---

பாராளுமன்றத் தேர்தல்-2015 (யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்)

## ஐக்கிய சோசலிசக் கட்சி

- இராணுவ மயமாக்கலில் இருந்து வட மாகாணத்தை முழுமையாக விடுவித்துக் கொள்வதற்கும்
- தமது பாரம்பரிய காணிகளில் சுதந்திரமாக வாழ்வதற்கும்

(096)

சுயநிர்ணய உரிமை உட்பட,
தமிழ் மக்களுக்குரிய
பிரிந்து செல்லும் உரிமையை
ஏற்றுக் கொள்ளும் ஒரே சோசலிச
அரசியற் கட்சி,ஐக்கிய
சோசலிசக் கட்சி மாத்திரமே.



சிறிதுங்க ஜயசூரிய
யாழ் மாவட்டத்தில் குழுத்தலைவர்

குற்றச்சாட்டுக்கள் இன்றி தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இளைஞர்களை விடுவித்துக் கொள்வதற்கும்

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் அரச படையினரிடம் சரணடைந்த பின்னர் காணாமற் போகச் செய்யப்பட்டோர் தொடர்பாக அவர்களு டைய உறவுகளின் முறைப்பாடுகளை சுயாதீனமாக விசாரணை செய்து துரிதமான தீர்வைப் பெறுவதற்கும்



X

ஐக்கிய சோசலிச கட்சி

சுதந்திரமான கௌர வமான வாழ்க்கைக்காக வடக்கும் தெற்கும் இணை ந்த மக்கள் இயக்கத்தை கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணையுங்கள்! ஐக்கிய சோசலிச கட்சிக்கு உங்கள் வாக்கை வழங்குங்கள்.

முச்சக்கர வண்டிக்கு (ஆட்டோவிற்கு) உங்கள் வாக்குகளை வழங்குங்கள்

---

# பாராளுமன்ற தேர்தல் - 2015


**ஈட்டி முனையில் எங்கள் தமிழினம்!**
**மீட்சி பெற்றிட ஓரணி திரள்வோம்!!**

**ஆட்சியாளரின் அடி வருடிகளை**
**அடியோடு நிராகரிப்போம்!**

(600)

நாடாளுமன்றத்தில் நமது போர்க்குரலாக


# ந. ஸ்ரீகாந்தா



X 6

**வெற்றியீட்ட வாக்களிப்போம் !**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Valampuri 004.pdf 1 8/13/2015 7:23:04 PM

# தேசியத்தை நேசிக்கும் தாயக உறவுகளுக்குப் புலம்பெயர் நாடுகளிலிருந்து ஓர் அன்பான வேண்டுகோள்

கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக எமது தாயகத்திலே இடம்பெற்ற அறவழி மற்றும் ஆயுதவழிப் போராட்டங்களுக்குப் பின்னர் இலங்கைத் தமிழர் பிரச்சனைக்குச் சர்வதேச ஆதரவோடு தீர்வுகாணக் கூடிய சூழல் ஒன்று இப்பொழுது உருவாகி உள்ளது.

விரைவில் நடைபெறவுள்ள தேர்தலுக்குப் பின்பு அமையப்போகும் இலங்கை அரசோடு தமிழர் தரப்பு அர்த்தமுள்ள, காத்திரமான பேச்சுகளில் ஈடுபட வேண்டிய அவசியம் உள்ளது. சர்வதேச நாடுகள் சிலவற்றின் உதவியும் பங்களிப்பும் இதற்கு வலுச்சேர்க்கும்.


எனவே, சர்வதேச நாடுகளில் அங்கீகாரத்தைப் பெற்ற, அறவழி மற்றும் ஜனநாயக மரபுடைய, வலுமிக்க ஒரு தமிழர் தரப்பு இலங்கை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பது மிக மிக அவசியமானதும் காலத்தின் கட்டாயமும் ஆகும்.


இன்றுள்ள நிலையில் இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், கனடா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட உலக நாடுகளாலும் இராசதந்திர வட்டாரங்களாலும் நன்கு அறியப்பெற்ற, ஏற்றுக் கொள்ளப்பட்ட, மதிக்கப்படுகின்ற, வடகிழக்கு முழுவதையும் பிரதிநித்துவப் படுத்துகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இதற்கு மிகவும் பொருத்தமான கட்சி என்பதில் கருத்து வேறுபாடில்லை என நாம் மிகவலுவாக நம்புகிறோம்.

எனவே 2015.08.17 அன்று இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தலில் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து மிகப் பலம் பொருந்திய கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தெரிவு செய்யுமாறு உங்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்ளுகிறோம்.


> “2015.08.17 அன்று இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தலில் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து மிகப் பலம் பொருந்திய கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தெரிவு செய்யுமாறு உங்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்ளுகிறோம்.”



பேராசிரியர். ஜோசப் சந்திரகாந்தன், ரொறன்ரோ, கனடா



கலாநிதி வண. எஸ். ஜே. இமானுவல், ஜேர்மனி


திரு. எஸ். சிவதாசன் ஓய்வுபெற்ற நிருவாகசேவை அலுவலர், அமெரிக்கா



கலாநிதி இராஜ் ரீ. இராஜேஸ்வரன், அவுஸ்திரேலியா



பேராசிரியர் உருத்திரமூர்த்தி சேரன், வின்சர். கனடா



சுரேன் சுரேந்திரன் கணக்காளர், பிரித்தானியா



மருத்துவர் பி. தங்கராஜா கலிபோணியா, அமெரிக்கா



மருத்துவர் வாசுகி எம். டிலில்லோ, சிட்னி, அவுஸ்திரேலியா



மருத்துவர் வி. சாந்தகுமார் மிசிசாகா. கனடா



வழக்கறிஞர் வே. குகனேந்திரன் பிரித்தானியா


மருத்துவர் பஞ்சகுலசிங்கம் கந்தையா, நோர்வே


மருத்துவர் சிற்றம்பலம் இராகவன், சிட்னி, அவுஸ்திரேலியா


இராஜ் தவரட்ணசிங்கம் தலைவர், கனடியத் தமிழர் பேரவை


கலாநிதி கந்தையா சோமசுந்தரம், பிரித்தானியா


கலாநிதி அபிசேக் போனபர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி


திருமதி சாலி படையாச்சி
முன்னாள் அமைச்சர் இராமசந்திர படையாச்சியின் மனைவி, தென்னாபிரிக்கா

மேலும், எமது பிரச்சினைகளை முழுமையாகச் சர்வதேச நாடுகளுக்கு உரிய முறையில் எடுத்து உரைக்கவும், உலக நாடுகளின் ஆதரவை எம்பக்கம் தொடர்ந்து வைத்துக்கொள்ளவும், சட்டவியல்-அரசியல் அறிவும் ஆங்கிலம், தமிழ் மற்றும் சிங்களப் புலமையும் செயல் திறனும் மிக்க உலக இராசதந்திரிகளுக்கு நன்கு அறிமுகமான திரு எம். ஏ. சுமந்திரனையும் மிகப் பெரும்பான்மையான வாக்குகளால் வெற்றி பெறச் செய்வதும் ஒரு வரலாற்றுக் கடமையாகும் என உங்களை அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.



இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.


திருக்குறள் 517

(344)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்ற பொதுத்தேர்தல் - 2015

கொண்ட இலட்சியம் குன்றிடாத எங்கள் கொள்கை வீரன் சிவஞானம் சிறீதரனுக்கே வாக்களிப்போம். 10



X 10 சிவஞானம் சிறீதரன்


M.Ed,B.A,PGDE(Mt),PGDEM,Sp.Tr(Ag)

TNA Tamil National Alliance இலங்கை தமிழ் அரசுக்கட்சி யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்

பச்சிலைப்பள்ளிப் பிரதேச மக்கள்.




## பாராளுமன்ற பொதுத் தேர்தல்–2015 யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்



4X

காசிப்பிள்ளை குலசேகரம்

B.A. Dip-in Ed, MEd



9X

ச.உஷாந்தன்

(சமூக சேவையாளர்)

தமிழர் விடுதலைக் கூட்டணி



X

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் 2015


## நடமாடும் சேவை

கரவெட்டி பிரதேச செயலகத்தில் காலம் கடந்த பிறப்பு, இறப்பு, திருமணம் பதிவு செய்தல் தொடர்பான நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது.

இந்நடமாடும் சேவையில் பயன் பெற விரும்பும் பயனாளிகள் உரிய ஆவணங்களுடன் கரவெட்டி பிரதேச செயலக பதிவாளர் கிளை மற்றும் கிராம அலுவலர்களுடன் தொடர்புகொண்டு முற் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (இ–5)

## வீதித்தடை பற்றிய அறிவிப்பு

யாழ்.-நல்லூர் ஆலயச் சூழலினூடான போக்குவரத்துச் சேவை எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிமுதல் தடை செய்யப்படவுள்ளது. நல்லூர் மஹோற்சவ பெருந்திருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு நல்லூர் ஆலயச் சூழல் வீதிப்போக்குவரத்துச் சேவை தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் வாகன உரிமையாளர்கள் மாற்றுப் பாதையினைப் பயன்படுத்துவதன் மூலம் ஆலயச் சூழலில் அமைதியைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாநகரசபை மாநகர ஆணையாளர் செ.பிரணவநா தன் அறிவித்துள்ளார். (இ–5)


## பாராளுமன்றப் பொதுத்தேர்தல்–2015

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்குமாறு
பகிரங்க வேண்டுகோள்

திரு. இரா.சம்பந்தன் அவர்களுக்கும் திரு.மாவை சேனாதிராஜா அவர்களுக்கும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் போட்டியிடும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) வேட்பாளர்கள் எட்டுப்பேருக்கும் உங்கள் விருப்பு வாக்குகளையும் மிகுதி விருப்பு வாக்குகளை நீங்கள் விரும்பும் வேட்பாளருக்கும் அளிக்குமாறு கோரிக்கை

1.திருகோணமலை தேர்தல் மாவட்டம்

திரு. இரா.சம்பந்தன்- இல. 3
(தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
திரு. ஆ. யதீந்திரா- இல. 1
(ஊடகவியலாளர்)

2.யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்

திரு.மாவை.சோ.சேனாதிராஜா- இல. 9
(தலைவர், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி)
திரு.ந.சிறீகாந்தா- இல. 6
(சிரேஷ்ட சட்டத்தரணி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

3.வன்னித் தேர்தல் மாவட்டம்

திரு. செல்வம் அடைக்கலநாதன்- இல.1
(தலைவர், ரெலோ, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
திரு. வினோநோதராதலிங்கம்- இல.9
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
திரு.P.செல்லத்துரை- இல.5
(மலையகத் தமிழர்களின் பிரதிநிதி, சமூகசேவையாளர்)

4.மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம்

திரு.கோவிந்தன் கருணாகரம், ஜனா- இல.4
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்)

5.அம்பாறை தேர்தல் மாவட்டம்

திரு.ஹென்றி மகேந்திரன் -இல.4
(செயலாளர் நாயகம், ரெலோ, முதன்மை வேட்பாளர்)
திரு.கவீந்திரன் றொபின்-இல.3
(சமூக சேவையாளர்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி X

### எம்.கே.சிவாஜிலிங்கம்

தேசிய அமைப்பாளர், தலைமைப்பீடக்குழு உறுப்பினர், தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), வடக்கு மாகாண சபை உறுப்பினர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.


# தேர்தல் கருத்துக் கணிப்பு

# மாபெரும் போட்டி

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி, வன்னி தேர்தல் மாவட்டங்களில் கட்சிகள் , சுயேட்சைக் குழுக்கள்

1. பெற்றுக் கொள்ளும் ஆசன எண்ணிக்கை?
பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படுபவர்களின் பெயர்கள்?

உங்கள் கருத்துக்களுக்கு பெறுமதியான பரிசில்கள்

### போட்டி நிபந்தனை

- ஒருவர் ஒரு கருத்துக்கணிப்பை மட்டுமே அனுப்பி வைக்க முடியும்
- போட்டியாளர் தாம் சார்ந்த தேர்தல் மாவட்டத்தின் முடிவை மட்டும் அனுப்பி வைத்தல் வேண்டும்.
- வலம்புரியில் வெளிவரும் வி ண்ணப்பப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு போட்டி முடிவுடன் இணைக்கப்பட வேண்டும்.
- முடிபுகள் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் தேர்தல் கருத்துக் கணிப்பு - 2015 என தவறாது குறிப்பிடவும்.
- உங்கள் கருத்துக்கணிப்பை 06.08.2015 தொடக்கம் 14.08.2015 வரை அனுப்ப முடியும் அனுப்பவேண்டிய முகவரி பிரதம ஆசிரியர், வலம்புரி, இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

### போட்டிக்கான விண்ணப்பப்படிவம்

போட்டியாளரின் முழுப் பெயர் : ..............................
முகவரி : ..............................
தொலைபேசி இல. : ..............................
தேசிய அடையாள அ.இல. : ..............................

..............................
போட்டியாளரின் கையொப்பம்

குறிப்பு:- தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னரே போட்டி முடிவுகள் வெற்றியீட்டியவர்களின் விபரம் என்பன வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாராளுமன்றத் தேர்தல் –2015



எமது பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் அணுகி, எமது நிரந்தர நியமனத்திற்காக ஜனாதிபதியின் அனுமதியை பெற்றுத் தந்து எமக்காக என்றும் ஒலிக்கும் குரல்கள்

X

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு



1

அங்கஜன் இராமநாதன்



5

பா.சுபதீசன்
(ஆங்கில ஆசிரியர்)

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் , தொண்டாசிரியர்கள். யாழ். மாவட்டம்



பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2015

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்



7

வன்னியசிங்கம் பிரபாகரன்

(075)

- இடம் பெயர்ந்த மக்களின் துயர் நீக்கல்
- புனர்வாழ்வு பெற்ற போராளிகள், மாவீரர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தல்



3

திருமதி விஜயகலா மகேஸ்வரன்
(முன்னாள் மகளிர் விவகார பிரதி அமைச்சர்)

X



பாராளுமன்ற தேர்தல் - 2015 யாழ். தேர்தல் மாவட்டம்

X

ஐக்கிய தேசியக் கட்சி

சவால்களைச்
சாத்தியமாக்கவும்
கனவுகளை நிஜமாக்கவும்
மாற்றத்திற்காய்
வாக்களிப்போம்


(நி-526)





6

வைத்தியர்
இ.சிவசங்கர் (MBBS)
யாழ்.போதனா வைத்தியசாலை





9

வைத்தியர், தவஸ்ரீ லயன்
சி.விஜயராஜன் (MBBS)
தேசிய வைத்தியசாலை



10

செ.மரியதாசன்
நாவாந்துறை

(050)



நாடாளுமன்றத் தேர்தல் 2015


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(இலங்கைத் தமிழ் ரசுக் கட்சி)

பாராளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் கல்வியியலாளரான

ந.அனந்தராஜ் B.A(Hons.),M.A.Dip-in-Edu...
Dip-in-Journalism,SLPS,SLEAS

(முன்னாள் அதிபர், உதவிக் கல்விப் பணிப்பாளர்,
உலக வங்கியின் வடமாகாண நிபுணத்துவ ஆலோசகர்,
கிழக்குப் பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர், பிரபல எழுத்தாளர்)

தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை



" 2009 இற்கு முன்னர் இருந்த கல்வி கலாசார பாரம்பரியத்தை மீள உருவாக்க விரும்புகின்றேன்"

(நி-526)

X 2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் இளைஞர்கள் அங்கம் வகிப்பது அவசியம்

## வடக்கு முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**அரசியலில் இளைஞர்கள் அங்கம் வகித்தால்தான் சமுதாயத்திலும் தலைமைத்துவத்திலும் மாற்றம் ஏற்படும் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

ஜனநாயகத்தின் முகவரி தேடும் இளையோரின் சங்கமம் எனும் தலைப்பில் மனித உரிமைகள் இல்ல இளைஞர், யுவதிகள் முதலமைச்சரை யாழில் சந்தித்து நேற்று முன்தினம் பிரேரணை ஒன்றினை கையளித்திருந்தனர். அதன் போது இளைஞர்கள் அரசியலுக்கு வருவது தொடர்பாக முதலமைச்சரிடம் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களை பொறுத்தவரையில் 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் தான் தலைமைத்துவம் வகிக்கின்றார்கள். அடுத்த கட்ட தலைமைத்து வம் ஏற்படுத்தப்பட வேண்டும். இளையோர்களை உற்சாகப்படுத்தி அவரகளை முன் கொண்டு வரவேண்டும்.

கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய விடயம் இது. சமுதாயத்தில் ஏற்படுத்தப்பட வேணடிய மாற்றங்கள் தொடர்பாக சிந்திப்பவர்கள் இளைஞர்களாகத்தான் இருக்கின்றார்கள். வயது முதிர்ந்தவர்கள் சமுதாயத்தை இருக்கும் விதத்திலேயே கொண்டு நடத்துவது தொடர்பாக மட்டும் சிந்திக்கிறார்கள். அவர்களிடத்தில் சமுதாயத்தில் மறுமலர்ச்சி வரவேண்டும் என்ற எண்ணம் இருப்பதாக தெரியவில்லை. எனவே மறுமலர்ச்சியை ஏற்படுத்த நினைக்கும் இளையோர் அரசியலில் ஈடுபட வேண்டும். முற்றிலும் மாற்றம் ஏற்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிக்கு ஒரு வருடம் கடூழிய சிறை

(கரணவாய்)

தாக்குதல் கொள்ளைச் சம்பவத்தில் கடந்த 5 வருடத்திற்கு முன்பு ஈடுபட்ட குற்றவாளி ஒருவருக்கு ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனையும் 30 ஆயிரம் ரூபா நட்டஈடும் செலுத்த பருத்தித்துறை நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் புதன்கிழமை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2 பெண்களைத் தாக்கி கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட குற்றவாளி ஒருவருக்கே மேற்படி தண்டனை நீதிமன்றத்தால் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 2009.03.23 ஆம் திகதி அன்று கரணவாய், கரவெட்டியில் வசிக்கும் ஜெயராணி, சிவகலா ஆகிய இரு பெண்கள் துவிச்சக்கர வண்டியில் வீதி வழியாகச் சென்று கொண்டிருந்தபோது மேற்படி குற்றவாளி அப் பெண்களை மிரட்டியதுடன் பொல்லுகளால் தாக்கி 20 ஆயிரம் பெறுமதியான தங்கச் சங்கிலி ஒன்றையும் பெருமளவு பணத்தினையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளார்.

தாக்குதலுக்குட்பட்ட குறித்த இரு பெண்களும் வீதியால் சென்றவர்களின் உதவியுடன் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாடு ஒன்றினையும் பதிவு செய்துள்ளனர்.

இது தொடர்பான குற்றச்சாட்டில் பொலிஸாரினால் தேடப்பட்டுவந்த குறித்த நபர் அண்மையில் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொண்டபின் குறித்த கொள்ளை தொடர்பான தகவல் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்றது.

இதனையடுத்து நேற்று முன்தினம் மேற்படி நபரினை பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டமைக்கு அமைய பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா மேற்படி தீர்ப்பளித்துள்ளார்.

மேலும் நட்டஈடு செலுத்தத் தவறும் பட்சத்தில் நட்டஈடு தண்டப் பணமாக அறவிடப்படும் எனவும் அவ்வாறு தண்டப்பணம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 5 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிபதி மேலும் உத்தரவிட்டுள்ளார்.(இ-5-60)

# ஆடிப்பூர உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கருமாரி அம்மன் ஆடிப்பூர நீரா ட்டு விழா நாளை மறுதினம் ஞாயி ற்றுக்கிழமை முற்பகல்10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

மஞ்சள் நீராட்டு விழாவுடன் ஆரம்பித்து பாற்செம்பு பவனியும் பால் அபிஷேகமும் இடம்பெறுவதுடன் முற்பகல் 11 மணிக்கு ருது சாந்தி வைபவமும் திருவூஞ்சல் வைபவமும் நடைபெற்று அம்பாளின் திருவீதி உலா இடம்பெறும். (இ-5)

✦✦✦✦✦✦✦✦✦✦

(யாழ்ப்பாணம்)

யாழ்.-கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் ஆடிப்பூர உற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தொடர்ந்துஅம்பாளின் திருமசன நீராட்டலும் ருது சாந்தி நிகழ்வும் நடைபெறவுள்ளன. (இ-5)

# ஞான ஏந்தல் விருது



அகில இலங்கைத் திருமுறை மன்ற தேவாரப் பண்ணிசை போதனாசிரியரும் கலாபூஷணம் திருமுறைக் கலாநிதி துறைசை ஆதீன திருமுறைத்தோன்றல் கே. எஸ். ஆர்.திருஞானசம்பந்த ஓதுவார் மூர்த்தி வடமாகாண சபையின் அனுசரணையுடன் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடத்திய கலைநிலம் விழாவில் ஞான ஏந்தல் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (இ)




# விடுதிகளில் கலாசாரச் சீர்கேடுகள் இடம்பெற்றால் உடன் அறிவியுங்கள்

## பரு.நீதிபதி கணேசராஜா உத்தரவு

(கரணவாய்)

பருத்தித்துறையில் இயங்கி வருகின்ற தங்குமிட விடுதிகளில் சமூகத்திற்கு கேடு விளைவிக்கும் வகையில் துஷ்பிரயோகச் செயற்பாடுகள், கலாசார சீரழிவுகள் எவையேனும் இடம்பெறுவதாயின் உடனடியாக பருத்தித்துறை நீதிமன்ற த்துக்கு தெரியப்படுத்துமாறு பருத் தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை நகரப்பகுதியில் 10 இற்கு மேற்பட்ட தங்குமிட விடுதிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இவ்விடுதிகளில் அநேகமாக தங்கும் நபர்கள் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் பல்வேறுபட்ட கலாசார சீரழிவுகள் ஏற்படுகின்றன.

இதனுடன் துஷ்பிரயோக சம்பவங்களும் நடைபெறுகின்றன.

இவற்றினை தடுக்கும் முகமாகவே பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மேற்கண்டவாறு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

அத்துடன் இது தொடர்பாக பிரதி பொலிஸ்மா அதிபருக்கும் தெரியப் படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான பிரச்சினைகள் இடம்பெறுவதை அறிந்தால் உடனடியாக அவ் விடுதிக்கான அனுமதியை இரத்துச் செய்வ தற்கான அதிகாரம் நீதிமன்றத்துக்கு உண்டு என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5-60)

# மத்தியஸ்த சபை அமர்வு ஞாயிறன்று நடைபெறாது

நல்லூர் மத்தியஸ்த சபையின் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வருகின்ற மத்தியஸ்த சபை அமர்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைநடைபெறமாட்டாது.

எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் காரணமாகவே மேற்படி மத்தியஸ்த சபை அமர்வு நடைபெறமாட்டாது என நல்லூர் பிரதேச மத்தியஸ்த சபை தவிசாளர் நா. நித்தியானந்தன்தெரிவித்துள்ளார்.(இ-5)

# விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(சாவகச்சேரி)

யாழ்.புத்தூர் சந்தியில் இடம் பெற்ற வாகன விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மேற்படி விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் மீசாலையைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான விநாசித்தம்பி தெய்வநாதன்(வயது-40) என்பவரே உயிரிழந்தவராவார்.

குழாய்க்கிணறு அடிக்கும் வேலை செய்துவந்த தொழிலாளியான குறித்த குடும்பஸ்தர் வேலை முடித்து விட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையிலேயே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தினை ஏற்படுத்திய வாகனம் அவ்விடத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளது.

உயிருக்கு போராடிக் கொண்டிருந்த மேற்படி நபர் உடனடியாக சாவகச்சேரி ஆதூர வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு அங்கிரு ந்து யாழ்.போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று முன் தினம் இரவே சிகிச்சை பயனளிக்காத நிலையில் பரிதாப கரமாக உயிரிழந்துள்ளார். (இ-5-29)



யாழ். எயிட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் மேம்பாட்டிற்கான உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Valampuri 002.pdf 1 8/13/2015 7:14:32 PM




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாளுமன்ற தேர்தல்- 2015
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்



தமிழர் விடுதலைக் கூட்டணியைஉருவாக்கியவர் களின் இலட்சியப் பாதையில்...
வடமராட்சி கிழக்கு அம்பனைச் சேர்ந்த
பாலசிங்கம் மோகனசுந்தரம்
தமிழர் விடுதலைக் கூட்டணி
அம்பன் X 6
(070)


# மகிந்தவின் சுவரொட்டிகளும் மதுபான போத்தல்களும் மீட்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் உருவப்படம் பொறித்த தேர்தல் சுவரொட்டிகள் மற்றும் மதுபான போத்தல்கள் உள்ளிட்ட பொருட்கள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.

குருநாகல் மாவட்ட வேட்பாளராக போட்டியிடும் மகிந்த ராஜபக்ஷவின் உருவப்படம் பொறித்த சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் அதி நவீன வாகமொன்றில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்த வாகனத்தில் சுமார் 66 மதுபான போத்தல்களும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொல்பித்திகம நிகவ அரச வைத்தியசாலைக்கு அருகாமையில் வைத்து இந்த வாகனத்தை பொலிஸார் மடக்கிப் பிடித்திருந்தனர்.

வாகனத்திலிருந்து சுமார் 1500 சுவரொட்டிகளும், சுமார் 500 துண்டுப் பிரசுரங்களும் மீட்கப்பட்டிருந்தன.

அனுமதிப்பத்திரம் இன்றி மதுபானம் எடுத்துச் சென்றமை, அளவிற்கு அதிகமாக மதுபான போத்தல்களை வைத்திருத்தல் மற்றும் சட்டவிரோதமான முறையில் தேர்தல் பிரசாரப் பொருட்களை எடுத்துச் செல்லல் ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் வாகனத்தில் பயணித்த இருவரும் கைது செய் யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

மீட்கப்பட்ட பொருட்களை அரசுடைமையாக்குமாறு மஹாவ நீதவான் தமித விஜேசிங்க உத்தரவிட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் மதுபானம் எடுத்துச் சென்றமைக்காக பத்தாயிரம் ரூபா அபராதமும் சட்டவிரோதமான முறையில் தேர்தல் சுவரொட்டிகளை எடுத்துச் சென்றமைக்காக நூறு ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

இதன்படி சந்தேக நபர்கள் இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதனால் தலா பத்தாயிரத்து நூறு ரூபா அபராதம் செலுத்தியதன் பின்னர் விடுதலை செய்யுமாறு நீதவான் அண்மையில் உத்தரவிட்டுள்ளார். (இ-7)


அன்பான வாக்காளப் பெருமக்களே!



★ சுயநல அரசியல்வாதிகளை ஓரம்கட்டுங்கள்
★ கட்சிபாராது தகுதியானவர்களை பாராளுமன்றம் அனுப்புங்கள்
★ எதிர்காலத்தில் உங்களுக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி நிதியாக உங்கள் முன் வருவேன். நீங்கள் அங்கீகரித்தால் சிறுபான்மையினரின் உரிமைகளை படிப்படியாக வென்றெடுப்பேன் என்பதை உறுதியாக கூறுகிறேன்.
அருள்பிரகாசம்- ஜெயந்திரன்
(சண்சய நிறுவன உரிமையாளர்)
கொக்குவில் மஞ்சவனப்பதி நிர்வாக சபை நிரந்தர உப செயலாளர்.




பாராளுமன்றத் தேர்தல் - 2015
● வடக்கையும் கிழக்கையும் இணைத்து ஒரு சுயாட்சி மாநிலத்தை அமைப்பதற்காக
● சமநீதியையும் சமவாய்ப்பையும் எல்லோருக்கும் வழங்கக் கூடிய புதிய சமூகத்தை அமைப்பதற்காக
● அரச நிர்வாகத்தினரால் மீறப்படும் பொதுமக்களின் உரிமைகளை நிலை நாட்டுவதற்காக...
திரு.மு.சிவகுருநாதன்
(சிரேஷ்ட சட்டத்தரணி)
தமிழர் விடுதலைக் கூட்டணி
X 8




(082)



பாராளுமன்ற தேர்தல்- 2015
யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்
அகில இலங்கை தமிழர் மகாசபை




X 3
நயினை கலாநிதி எந்திரியர்
காசிலிங்கம் விக்னேஸ்வரன்



9
சிவசம்பு சதீஸ்வரராசா
(அன்றா)



பாராளுமன்றத் தேர்தல் 2015
வன்னி தேர்தல் தொகுதி



ஈழமக்களின் இயல்பான வாழ்விற்காய்...
X 3
(இ-493)
திரு. இ.சாள்ஸ் நிர்மலநாதன்
தொழிலதிபர், பிரஜைகள் குழு உபதலைவர்
இலங்கை தமிழரசுக் கட்சி
(தமிழ் தேசிய கூட்டமைப்பு)
வன்னி தேர்தல் தொகுதி மக்கள்



பாராளுமன்றத் தேர்தல் – 2015
பொய் தீர்ந்து மெய் வெல்ல வாக்களிப்போம்



4
டக்ளஸ் தேவானந்தா
X
சத்திய தேவனே...!
மரணத்தை வென்ற மானிடனே...!
ஏழைகளின் இதயக் கனியே...!
மானத் தமிழன் விழித்துக்
கொண்டான்- எம்மை
ஏமாற்றும் ஈனத் தமிழர்
ஆகஸ்ட் 17 ஆட்டம் கண்டு ஓட்டம் எடுப்பார்
எம் ஆணை ஏற்று வீணையில்
வந்தவரே!!! இனி வெற்றிமேல் வெற்றி உனக்கே!!!
ஊர்ப்புழுதியில் புரண்ட எங்களை
பார் எங்கும் பேர் சொல்ல வைத்த ஆசானே!
யாழில் சைவமும் தமிழும் தழைக்க வைத்தவரே!
பயிர் விளையும் தேசத்தில்
உயிர் அழியக்கூடாது என்ற
உணர்வில் வளர்ந்தவரே
சொல்லின் செல்வனே!!
நாக்கு மாறாத நல்லவனே!- எங்கள்
வாக்கு உனக்கே




3
மாணவர்கள்
இரா.செல்வவடிவேல்
ஈழமக்கள் ஜனநாயக கட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரக்தியிலேயே நான் விலகினேன்

## சனத் ஜயசூரிய தெரிவிப்பு



(கொழும்பு)

மாத்தறை வாழ் மக்களுக்கு எந்தவித சேவையும் செய்ய முடியவில்லை என நான் மன விரக்தியுடன் இருந்தேன். இதனாலேயே ஐ.ம.சு. முன்னணியில் இருந்தும் அமைச்சர் பதவியிலிருந்தும் உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகினேன் என ஐ.ம.சு.முன்னணியின் முன்னாள் அமைச்சரும், விளையாட்டு வீரருமான சனத் ஜயசூரிய தெரிவித்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாத்தறை - பம்புரணையிலுள்ள ஐ.தே.முன்னணியின் மாத்தறை மாவட்ட வேட்பாளர் சாகல ரத்நாயக்கவின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊழல் மோசடிகளற்றவர்களையே இம்முறை பாராளுமன்றத்திற்கு மக்கள் அனுப்ப வேண்டும். இதற்குப் பொருத்த மானவர் சாகல ரத்நாயக்கவே என்று கருதுகிறேன்.

ஐ.ம.சு. முன்னணியில் அமைச்சராக இருந்து சரியானதை என்னால் செய்ய முடியாமல் போனதையிட்டு மிகவும் கவலையடைந்தேன்.

எனவே நான் அந்தக் கட்சியிலிருந்தும் வெளியேற முடிவு செய்தேன். மீண்டும் மக்களை ஏமாற்றி எம்.பி. பதவியை பெற விரும்ப வில்லை.

நல்லாட்சியின் கீழ் நாடு வீறுநடை போடுவதையை நாம் காண விரும்புகிறோம்.

மாத்தறை மாவட்டத்தில் ஐ.தே.முன்னணி வெற்றிபெற வாழ்த்துகிறேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


**விற்பனைக்கு**

37ஸ்ரீ XXX இலக்கமுடைய உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு. (Model 240 மசிபேகிஷன்) (1473)

தொடர்புகளுக்கு 077 865 5805



பாராளுமன்றத் தேர்தல் – 2015

யாழ்.மாவட்டம்



5

(சி-442)

ந.மதிஅழகராசா (மதி)

முன்னாள் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்

X 5

தமிழர் விடுதலைக் கூட்டணி

மாற்றம் ஒன்றே மாறாதது...



# தேர்தல்கள் திணைக்களம்

## பாராளுமன்றத் பொதுத் தேர்தல்- 2015

## வாக்களித்தல் மற்றும் விருப்பு அடையாளமிடல் தொடர்பாக சுருக்கமாக விளக்கமளித்தல்

## வாக்குச் சீட்டின் மாதிரி படிவம்.

கட்சியின் பெயர்/ சுயேட்சைக் குழுவின் விபரம் | கட்சியின் பெயர்/சுயேட்சைக் குழுவின் சின்னம்





| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | |

இவைவிருப்பு இலக்கங்களல்ல. இவ்விலக்க ங்களை விருப்பு இலக்கங்களாகக் கருதி அவற்றின் மீது புள்ளடியிடுவதைத் தவிர்த்துக் கொள்ளவும்.

விருப்புக்களை அடையாளமிட வேண்டியது விருப்பு இலக்கங்களைக் காட்டுகின்ற இச்சதுரங்களுக்குள் மாத்திரமேயாகும்.

வாக்கினை அளிப்பதற்கு ஒரு புள்ளடியை இட வேண்டியது நீங்கள் விரும்புகின்ற கட்சியின்/குழுவின் சின்னம் உள்ள வரிசையில் காணப் படுகின்ற அச்சின்னத் திற்கு எதிரேயுள்ள இந்த வெற்றுக் கூட்டினுள் மாத்திரமே யாகும். இந்தவெற்றுக் கூடுகள் பலவற்றிலோ, வரிசைகள் பலவற்றிலோ ஒன்றுக்கு மேற்பட்டபுள்ளடிகளை இட்டால் வாக்குசீட்டு நிராகரிக்கப்படும்.

*1. கட்சி/குழுவொன்றிற்கு வாக்குஅடையாளமிடப்படாத வாக்குச் சீட்டுசெல்லுபடியற்றதாகும். அதற்கு எவ்வித பெறுமதியும் கிடையாதென்பதுடன் அதுநிராகரிக்கப்படும்.*

*2. முதலில் வாக்கை அடையாளமிட்டுஅதன் பின் விருப்பமாயின் விருப்புவாக்கை அடையாளமிட முடியுமென்பதைக் கருத்திற் கொள்ளவும்.*

*3. அனைத்துக் கட்சிகள் / குழுக்களின் பெயர்கள், சின்னங்கள், வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் விருப்பு இலக்கங்கள் என்பவற்றைக் காட்டுகின்ற அறிவித்தலொன்றுஅனைத்துவீடுகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதோடு, அவ்வாறான அறிவித்தலொன்று வாக்கெடுப்பு நிலையத்திலும் காட்சிப்படுத்தப்படும்.*

*4. வாக்களிக்க முடிவது 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பெயர் காணப்படுகின்ற வாக்காளர்களுக்கு மாத்திரமேயென்பதோடு, அவர்கள் தமது ஆளடையாளத்தை உறுதி செய்து கொள்வதற்காக வாக்கெடுப்பு நிலையத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட செல்லுபடியான ஆளடையாள அட்டையொன்றைச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.*

மஹிந்ததேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.
14.08.2015

தேர்தல்கள் செயலகம்,
இராஜகிரிய.

# ராசி பலன்

14.08.2015

(ஆடி 29, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
அமாவாசை முன்னிரவு 8.56மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 2.42மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
ஆடி அமாவாசை விரதம்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | இரவு 2.44 இற்கு சிங்-சந் | | சூரி செவ் சந் |
| | | | குரு சுக் |
| | | சனி | ராகு |

வளவன்

**மீனம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், நீண்டநாட்களாக திட்டமிட்டிருந்த காரியமொன்று இன்று கைகூடும் வாய்ப்புண்டு, பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**மேடம்** வழிபாட்டால் நலம்காண வேண்டிய நாள், தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் சுமுகமாக அமையும்.

**இடபம்** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், மூத்த சகோதரர்கள் உங்களில் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்** ஆன்மீக சிந்தனை அதிகரிக்கும் நாள், சந்தித்த நண்பர்களால் சந்தோசங்கள் கூடும் நாள், கடினமான வேலை களைக் கூட நயமாக பேசி முடித்துக்கொள்வீர்கள்.

**கும்பம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும், மனித தெய்வ வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள், கடன் சுமை குறைய புதிய உத்திகளைக் கையாள்வீர்கள்.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற விரதம், வழிபாடுகளை கடைப்பிடிக்க வேண்டிய நாள், உங்களைப் பற்றி விமர்சிக்கும் சிலரிடம் எதிர்த்துப் பேசாமல் செல்வீர்கள்.

**மகரம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், இறைவழிபாட்டால் இன்பம் காணவேண்டிய நாள்.

**சிம்மம்** வரவை காட்டிலும் செலவுகள் அதிகரிக் கலாம், பயணங்களில் விழிப்புணர்வு தேவை, காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை அமையலாம்.

**தனுசு** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்கவேண்டிய நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம்.

**விருச்சிகம்** வழிபாட்டால் பெருமைகாண வேண்டிய நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பயணங்கள் கைகூடும்.

**துலாம்** புதிய திருப்பங்கள் ஏற்படலாம், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள்.

**கன்னி** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் அதிகரிக்கும் நாள், முயற்சிகள் கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு
தேசம்
ஒரு
நாடு

ஈழத் தமிழரது தனித்துவ அரசியல் பேரியக்கத்தின்
வலுவான தொடர்ச்சியை மீளக் கட்டமைப்போம்

ஓகஸ்ட் 17 தேர்தலில்
தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமையை பாதுகாக்க

# கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

தலைமையிலான

## அகில இலங்கை தமிழ்க் காங்கிரசுக்கு

வாக்களியுங்கள்!

2009 முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் பின்னரான எமது மக்களின் அரசியல் இராசதந்திர வழி உரிமைப் போராட்டத்தில் தொடர்ச்சியான பங்காளர்களாகப் பயணிக்கும் புலம் பெயர் உறவுகளும், தாய்த் தமிழக தொப்புள் கொடி உறவுகளும் உங்களுக்கான உதவிக் கரமாகவும், உரிமைக் குரலாகவும் என்றென்றும் இருப்போம். அதேவேளை இன்று காலத்தின் தேவையான அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டி உங்கள் முழுமையான பங்களிப்பை உரிமையுடன் வேண்டுகின்றோம்

புலம் பெயர் ஈழத் தமிழர்கள் சார்பாக

சுவிஸ் ஈழத்தமிழர் அவை - சுவிஸ்
நோர்வே ஈழத்தமிழர் அவை - நோர்வே
கனேடிய தமிழர் தேசிய அவை - கனடா
இத்தாலி ஈழத்தமிழரவை - இத்தாலி
பிரான்ஸ் தமிழர் பேரவை - பிரான்ஸ்
சுவீடன் தமிழர் தேசிய அவை - சுவீடன்
தமிழர் நீதிக்கான அமைப்பு - அவுஸ்திரேலியா
பெல்ஜியம் தமிழர் தேசிய அவை - பெல்ஜியம்
பின்லாந்து தமிழர் பேரவை - பின்லாந்து
டெனிஸ் தமிழ் அமைப்புக்களின் ஒன்றியம் - டென்மார்க்
நெதர்லாந்து தமிழர் அவை - நெதர்லாந்து
நியூசீலந்து தமிழர் தேசிய அவை - நியூசீலந்து
யேர்மன் ஈழத்தமிழர் மக்கள் அவை - யேர்மனி
தமிழர் இனஅழிப்புக்கு எதிரான கூட்டமைப்பு - மொரிசியஸ்
மாற்றத்துக்கான குரல் - பிரித்தானியா



அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
All Ceylon Tamil Congress
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
Tamil National People's Front


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த.தே.கூ.அநீதிகளை கடுமையாக எதிர்க்கும் முன்னாள் எம்.பி.சுரேஷ் தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் எந்தவொரு இன ஒடுக்குமுறைக்கும் துணைபோகாது என்பதுடன் தமிழ்மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை கடுமையாக எதிர்க்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட தேர்தல் பரப்புரை கடந்த புதன்கிழமை மாலை இணுவிலில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாய அமைச்சினால் வடமாகாணத்திற்கான விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளராக 361 பேர் நியமிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதில் 29பேர் மட்டுமே தமிழர்கள். எஞ்சிய 332 பேரும் சிங்களவர்கள். வடமாகாணம் என்பது தமது பொருளாதாரத் தேவைகளுக்கு பெருமளவில் விவசாயத்தையே நம்பியுள்ளது.

இந்நிலையில் 99வீதம் தமிழர்களைக் கொண்ட யாழ்ப்பாணத்திற்கு 23 தமிழ் ஊழியர்களும், அதே அளவு தமிழ் மக்களின் ஜனத்தொகையைக் கொண்ட கிளிநொச்சி மாவட்டத்திற்கு 4தமிழர்களும் 80 வீதத்திற்கும் மேலாக தமிழர்கள் வாழும் வவுனியாவிற்கு 2 தமிழர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு ஒரு தமிழர்கூட நியமிக்கப்படவில்லை என்பதுதான் மிகவும் வேதனையான விடயம்.

இது குறித்து சில அதிகாரிகள் கருத்து தெரிவிக்கையில்,

இந்த நியமனங்கள் மத்திய அரசினால் செய்யப்படுபவை. இனவிகிதாசார அடிப்படையில் இந்த நியமனங்கள் வழங்கப்படுகின்றன என்று கூறுகின்றனர்.

வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளை எடுத்துக் கொண்டால் அங்கு பெரும்பான்மையாக சிங்கள மக்களே வாழ்கின்றனர். அங்கு எம்மவர்களுக்கு வாய்ப்பு கிட்டாது. மொத்தத்தில் எமது பகுதியிலும் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பில்லை. ஏனைய பகுதிகளிலும் வேலை வாய்ப்பில்லை என்றால் நாங்கள் எந்தநாட்டுப் பிரஜைகள்?

இலங்கை அரசின் இவ்வாறான நிலைப்பாடுதான் இனப்பிரச்சினைக்கான ஆணிவேர் என்பதை அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். எமது பிரதேசத்தில் எமது விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கும் விவசாய உற்பத்தி தொடர்பில் ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கும் எமது பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் தயாராக இருக்கும் போது அவர்களைப் புறக்கணித்து இத்தகைய நியமனங்களை மேற் கொள்வது கண்டிக்கத்தக்கது. எமது பிரதேசங்களில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளராக வருவதற்குக்கூட தமிழர்களுக்கு வாய்ப்பில்லை எனில் நல்லிணக்கம் எவ்வாறு ஏற்படும்? என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)












Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல்-2015
# யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்

## தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கிய உத்தமர்களான







அ. அமிர்தலிங்கம் | ஜி.ஜி.பொன்னம்பலம் | தந்தை செல்வா | சௌ. தொண்டமான் | மு. சிவசிதம்பரம்

இவர்களின் இலட்சியப் பாதையில்



**முதன்மை வேட்பாளர்**
**இ. த. விக்னராசா**
**(ஓய்வுநிலை மேல் நீதிமன்ற நீதிபதி)**

என் அருமை வாக்காளப் பெருமக்களே!

தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளையும் நீதியையும், அர்ப்பணிப்புடனும் இதயசுத்தியுடனும் செயற்பட்டு, பெற்றுத் தரக்கூடியவர்களே இன்றைய காலத்தின் தேவை என்பதனை நன்கு உணர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆரம்பகால ஆதரவாளர்களும் உறுப்பினர்களும் ஒன்று திரண்டு ஆவணி 17 ஆம் திகதிய பாராளுமன்ற பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக என்னை ஏகமனதாக நியமித்துள்ளனர்.

அண்ணன் அமிர்தலிங்கத்துடன் அன்று வாலிபனாக வட்டுக் கோட்டைத் தொகுதி பூராகவும் மக்களை அவர்தம் வதிவிடங்களுக்கு நேரில் சென்று சந்தித்து உரையாடியது போல உங்கள் ஒவ்வொருவரையும் நேரில் வந்து சந்தித்து உரையாடி, நேர்மையான, மக்கள் பற்றுள்ள ஒரு புதிய தமிழ்த் தேசியத்துக்கு அர்ப்பணிப்புடன் ஆழமாக வடிவமைக்கப்பட்ட வல்லவர்களை அடையாளம் கண்டு பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ய வேண்டியது இன்றைய காலத்தின் தேவை என்ற உண்மைகளை தெளிவுபடுத்தி, உங்கள் உள்ளத்தில் நம்பிக்கை ஒளிக்கீற்றை உருவாக்க வேண்டுமென்ற எனது இதய பூர்வமான ஆதங்கத்தை செயல் வடிவம் கொடுக்க தற்போதைய தேர்தல்கள் சட்டம் இடமளிக்காமையால் இம் மடலை வரைகிறேன்.

முதற்கண், கடந்த வட மாகாண சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, புளோட் ஆகிய அரசியல் கட்சிகள் ஓரணியாகத் திரண்டு தேர்தலில் போட்டியிட்டு ஒரு இலட்சத்து முப்பத்து மூவாயிரம் விருப்பு வாக்குகளை தமிழ் பேசும் மக்கள் வழங்கி அடையாளம்காட்டி முதலமைச்சராக தெரிவான நீதியரசர் க. வ. விக்னேஸ்வரன் அவர்கள் ஆவணி மாதம் 17 ஆம் திகதிய பாராளுமன்ற தேர்தலில் அரசியல் நேர்மையுள்ள, நீதியான, சலுகைகளுக்கு விலை போகாத மக்களுடன் சேர்ந்து வாழ்ந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றக் கூடியவர்களை உங்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்ய வேண்டுமென விடுத்த வேண்டுகோள் இலட்சியப் பற்றுள்ள இனிய தமிழ் பேசும் மக்களுடைய சிந்தனைக்குரியதாகும் எனக் கருதுகிறேன். ஏனெனில், வட மாகாண சபைத் தேர்தலில் ஓரணி யாகத் திரண்டு நின்ற தமிழ் அரசியல் கட்சிகள் பாராளுமன்ற தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவும் தமிழ் பேசும் மக்கள் முன் நிற்பதனால் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களை மாத்திரம் ஆதரிக்காது ஓர் நடுநிலைமையுடன் மக்களை சரி யான வழியில் வழி நடத்தும் பொருட்டு உரிமைகளையும், நீதியையும் தூரநோக்குப் பார்வையில் அர்ப்பணிப்புடன் பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்த்து வைக்கக்கூடிய சலுகைகளுக்கு விலை போகாத பிரதிநிதிகளை தெரிவு செய்யுமாறு நீதியரசர் க. வ. விக்னேஸ்வரன் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்பதுடன் இதேவேண்டு கோளை மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் அவர்களும் வலி யுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையிலும் மக்களை சரியான வழியில் வழிநடத்தும் பொருட்டு தமிழ்த் தேசிய நலன்களை முன்னிறுத்தக் கூடிய பிரதிநிதிகளை தெரிவு செய்யுமாறு அறைகூவல் விடுத்திருப்பதும் தமிழ் பேசும் மக்களை நிதானமாக சிந்தித்து வாக்களிக்கும் உரிமையை தவறாது பயன்படுத்த தூண்டுகோலாக அமைந்துள்ளது.

மேலும் சிவில் சமூகம் விடுத்துள்ள கோரிக்கையில் வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு என பிராந்திய பாகுபாடு காட்டாது தமிழ் மக்களுக்கு தயங்காது துணிந்து குரல் கொடுத்து இயங்கக் கூடியவர்களுக்கு மறவாது வாக்குகளை தவறாது புத்திசாலித்தனமாக பிரயோகியுங்கள் என விடுக்கப்பட்ட அறிக்கை மூலமும் தமிழ் மக்களின் உரிமைகளிலும் வாழ்வாதாரத்திலும் அக்கறை உள்ள புத்திஜீவிகள், சமயத் தலைவர் போன்றோருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது முழுமையான நம்பிக்கை இல்லை என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் தமிழ் மக்களின் நலனுக்காக அணி திரண்டு ஒற்றுமையாக தமிழ்த் தேசியத்தில் அக்கறை கொண்டு அர்ப்பணிப்புடன் வரலாற்றுக் கடமைகளை செயற்படுத்தக் கூடியவர்களுக்கே எதிர்வரும் 17 ஆம் திகதி வாக்களித்து வெற்றிபெறச் செய்ய வேண்டும் என விடுக்கப்பட்ட அறைகூவல் காலத்தின் கட்டாய தேவையாகும் என தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்துகின்றது.

1961 ஆம் ஆண்டு மாசி மாதம் 20 ஆம் திகதி தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க மறுத்த இலங்கை அரசுக்கெதிராக யாழ்ப்பாணக் கச்சேரிக்கு முன்பாக, தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஓர் அங்கமாக தன்னை 1976 இல் இணைத்துக் கொண்ட தமிழரசுக் கட்சியின் தந்தை செல்வாவினால், ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரக போராட்டம் [illegible] பம் எடுத்து தபால் சேவை நடாத்த எடுத்த முடிவுக்கமைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் இன்னும் ஓர் அங்கமாக தன்னை 1976 இல் இணைத்துக் கொண்ட அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் உடுப்பிட்டி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் மு. சிவசிதம்பரம் அவர்கள் போராட்டத்தில் இணைந்து முதலாவது கடிதத்தை அரசாங்க அதிபருக்கு விநியோகித்து தமிழ்த் தேசியத்திற்கு வலுவூட்டினார். ஆகவே, 1960 ஆம் ஆண்டிலேயே என் இனிய தமிழ் மக்கள் தமிழ் தேசியத்தை முன்னிறுத்தக் கூடியவர்களையே தமது பிரதிநிதிகளாக தெரிவு செய்தனர் என்பது மறத் தமிழர் வரலாறாகும்.

ஆகவே, நேர்மையான அரசியலில் அர்ப்பணிப்புடன் தமிழ் பேசும் மக்களின் தனித்துவத்தில் உறுதியுடன் தூர நோக்குப் பார்வையில் மக்களுடைய துன்ப துயரங்களை மக்களுடன் சேர்ந்து வாழ்ந்து அனுபவித்தவன் என்ற வகையிலும், பிறந்தது முதல் இன்றுவரை, கொடூரமான யுத்த நிலைமைகளிலும்இம்மண்ணை விட்டுச் செல்லாமல்பின்வரும் வகையிலும் அவற்றிற்கு மேலாகவும் என்னால் இயன்றளவு மக்களுக்காக சேவையாற்றியவன் என்ற வகையிலும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்த்து வைக்க உறுதி பூண்டுள்ளேன்.

பிரதானமாக, குடாநாட்டிலும், வன்னிப் பிராந்தியங்களிலும் நீதிமன்றங்கள் இயங்காமல் இருந்த நேரங்களில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை அலுவலகத்தினால் யாழ். போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு கொண்டு செல்ல வேண்டிய நோயாளிகளின் போக்குவரத்து சேவையை யாழ். கிளை அம்புலன்ஸ் வண்டி மூலம் கிளாலி வரையும், அங்கிருந்து நல்லூர் இறங்குதுறை வரை மிகத் திகிலான அனுபவங்களுடன் படகிலும், அங்கிருந்து கொழும்பு வைத்தியசாலை வரை கிளிநொச்சிக் கிளையில் தங்கவிட்ட யாழ். கிளை அம்புலன்ஸ் வண்டி மூலமும் வழங்கப்பட்ட அச் சேவையின் செயற்பாட்டு பொறுப்பு அலுவலராக குறித்த நோயாளிகளுடன் மக்கள் சேவையை மாத்திரம் நோக்காக கொண்டு பயணித்து செயற்பட்டு வந்ததுடன், பின்னர் 1997 ஆம் ஆண்டில் நீதிமன்றங்கள் செயற்பட ஆரம்பித்து நீதிபதியாக கடமையாற்றிய காலங்களிலும் நீதிமன்றங்களில் ஏற்பட்ட வேலை வாய்ப்பு வெற்றிடங்களை நிரப்பும் முகமாக வடபகுதி இளைஞர் யுவதிகள் நேர்முக தேர்விற்காக தென்பகுதி செல்வதில் காணப்பட்ட தடங்கல்களை கருத்தில் எடுத்து அவர்களின் வேலைவாய்ப்பு உரிமையை நிலைநாட்டும் வகையில் உரிய நடவடிக்கைகள் எடுத்து நியமனங்களை உறுதி செய்து பெற்றுக் கொடுத்ததோடு, போர்க் காலகட்டத்தில் வன்னிப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் குடும்பமாக படகுகளில் இந்தியா விற்கு தஞ்சமடைய கடலில் பயணம் செய்யும் [illegible] கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு யாழ். சிறைச்சாலையில்தடுத்து வைக்கப்பட்ட போதும் சட்டமா அதிபரினால் இவர்களுக்கெதிராக குற்றப் பத்திரம் தாக்கல் செய்யவில்லையென நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களில் சட்டத்தின் தேவைப்பாட்டிற்கமைய அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டிய நிலைமையில் விடுதலையானவர்கள் பலர் தமக்கென யாருமற்ற சூழ்நிலையில் சுதந்திரமாக வெளியே சென்று தங்க இயலாமல் இருந்த சூழ்நிலையிலும், தொடர்ந்து சிறைச் சாலையில் தங்க சட்ட ஏற்பாடுகள் அற்ற நிலையிலும் உரிய அதிகாரிகளின் அனுமதிகளை சிரமங்களின் மத்தியில் பெற்று காலஞ்சென்ற எனது மனைவியின் முழுமையானஒத்துழைப்பு மற்றும் ஆதரவுடன் அவர்களை தங்க வைத்து பராமரிக்கும் ஒழுங்குகள், ஏற்பாடுகள் யாவையும் என்னால் மனித நேயத்துடனும் இதய சுத்தியுடனும்செயயப்பட்டன.

எனவே, தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்த்து வைக்க உறுதி பூண்டுள்ள நிலையில்,அவ்வாறு நான் செயற்பட வேண்டும் என நீங்கள் என்னை ஏற்றுக் கொண்டு அங்கீகரித்து, **உங்களுக்குரிய வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று உங்கள் பொன்னான வாக்கினை தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமாகிய உதய சூரியன் சின்னத்திற்கும் எனக்கெனத் தரப்பட்டிருக்கும் இலக்கமான 1 ஆம் இலக்கத்திற்கும் புள்ளடியிட்டு** என்னை உங்களில் ஒருவனாக ஏற்றுக்கொண்டுள்ளதை வெளிக்காட்டி தேர்நிதெடுப்பதன் மூலம் என்னால் சேவை மனப்பான்மையுடனான அர்ப்பணிப்புடனும், மன சுத்தியுடனும், இதுவரை நான் சேவையாற்றியது போல தொடர்ந்தும் இந்த புதிய பரிமாணத்தில் என்னால் உங்களுக்கு சேவையாற்ற முடியும் என்பதை என் இனிய தமிழ் பேசும் இதயங்களுக்கு இத்தால் வெளிப்படுத்தி உறுதி கூறுகிறேன்.

### எமது அரசியல் பிரச்சினைக் கான தீர்வு

2002 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 11 ஆம் திகதி சமாதான ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காலப்பகுதியில் கிளிநொச்சி நீதிமன்ற கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்களால் பிராந்தியங்களின் ஒன்றியம் என்பதனை மையமாகக் கொண்டு வரையப்பட்ட அரசியலமைப்பு வரைபு தமிழ் பேசும் மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடியது. என தெளிவுபடுத்தியுள்ளதால் குறித்த அரசியலமைப்பு வாயிலாக தமிழ் மக்களின் உறைவிடங்களை பிராந்தியங்களின் ஒன்றியமாக உருவாக்க உறுதியளிக்கின்றேன். மேலும் தாங்கள் ஆணை வழங்கும் பட்சத்தில்

ஆட்சிமொழியாக்கப்பட்ட தமிழ் மொழியை நீதி, நிர்வாகத் துறைகளில் அமுல்படுத்த அரசியலமைப்பில் செய்யப்பட்ட 16 ஆவது திருத்தத்தை நுழைவாயிலாகக் கொண்டு வடக்கு கிழக்கு மாகாணங்களிலும், இலங்கையின் ஏனைய பகுதிகளில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஆட்சி மொழியாக தமிழ் மொழி கோலோச்ச வகை செய்தல்.

சட்டம் - ஒழுங்கு, நிலம், கல்வி, கலாசாரம், சுகாதாரம், உள்ளூராட்சித்துறை என்பவற்றை முழுமையாக பிராந்திய சபையிடம் கையளித்தல்.

கல்வியிலும் வேலைவாய்ப் பிலும் தமிழ் பேசும் மக்களுக்கு சம்பூரண சம உரிமையை உரு வாக்குதல்.

யாழ்ப்பாணத்தில் உடனடியாக தொழில் நீதிமன்றம் மீள செயற்பட நடவடிக்கை எடுத்தல்.

ஏனைய பிரதேசங்களைப் போன்று வடக்கிலும் தொழிற்சங்கங்களை வளரச் செய்து ஸ்திரப்படுத்துவதன் மூலம் தொழிலாளர்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்.

பெண்கள் தலைமைத்துவத்தின் கீழ் உள்ள குடும்பங்களின் வாழ வாதாரத்தை ஸ்திரப்படுத்தி, சமூகத் தில் உரிய அந்தஸ்துடன் வாழ வழிசமைத்தல்

பெண்கள், சிறுவர்களுக கெதிரான வன்முறைகளை துடைத் தெறிய, சமுதாய விழுமியங்களை பேணும் பொறிமுறைகளை சமூகத்தில் உருவாக்குதல்.

பிராந்திய மட்டத்தில் ஒரு உயர் நீதிமன்றம் அமைக்கப்படுதல்.

பிராந்திய சபைகளுக்கு பொருளாதார ஒதுக்கீடு பற்றி தீர்மானம் செய்வதற்கு ஒரு நிதிக்குழு உருவாக்குதல்.

அரசியல் கைதிகளைவிடுதலை செய்யவோ அல்லது குறைந்தபட்சம் அவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்யுமாறு அழுத்தம் கொடுக்கும் செயற்பாட்டிற்கு முன்னுரிமை வழங்குதல்.

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை எடுத்தல். அல்லாது விடின் சுயதொழிலில் ஈடுபடும் வாய்ப்பையேனும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கையெடுத்தல்.

இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் வீடுகள் மற்றும் நிலங்கள் எதுவித மறுப்புமின்றி உடனடியாக உரியவருக்கு கையளிக்கப்படவும், மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த சகோதர முஸ்லிம் மக்கள் அனைவரையும் அவரவர் இடங்களில் மீளக் குடியேறவும், குடியேறும் மற்றும் குடியேற்றப்படும் சகோதர முஸ்லிம் மக்களின் அவசிய தேவைகளை அடையாளம் கண்டு பூர்த்தியாக்கப்படல்.


மீன்பிடி பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் வடபகுதி மக்களை பாதிக்காத வகையில் சுமுகமான தீர்வுக்கு இணங்கவேண்டும் என வலியுறுத்தி தீர்வுக்கு உதவுதல்.

போன்றவற்றிற்கு செயல் வடிவம் கொடுக்கவும் அர்ப்பணிப்புடனும் இதய சுத்தியுடனும் செயலாற்றுவோம் என உறுதியளிக்கிறேன்.

தமிழ் பேசும் மக்களாகிய நீங்கள் ஒன்றிணைந்து கடந்த ஜனாதிபதித தேர்தலில் அரசியல் சாணக்கியத்துடன் புத்தி சாலித்தனமாக வாக்களிதது ஒரு ஜனாதிபதியை மாற்றக் கூடிய சக்தியை அகிலத்திற்கு வெளிப்படுத்தினீர்கள். அதேபோல எதிர்வரும் பொதுத தேர்தலி லும், **நேர்மையான அரசியல் கொள்கையில் உறுதியாக நின்று தமிழ்த் தேசியத்தின் மீது தமக்குள்ள வரலாற்றுப் பொறுப்பை, தார் மீகக் கடமைகளை சரிவரச் செய்ய மனோதிடம் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி வேட் பாளர் களுக்கு ஒற்றுமையாக ஒருமித்து வாக்களித்து** தமிழ் பேசும்மக்களின் இதயங்களில்இறைஞ்சுகின்ற அந் தமுள்ள அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த வேணடுமென அறை கூவல் விடுக்கிறேன்.

நன்றி.

இ. த. விக்னராசா
ஓய்வுநிலை மேல் நீதிமன்ற நீதிபதி
தமிழர் விடுதலைக் கூட்டணியின்
முதன்மை வேட்பாளர்





X 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத் தேர்தல் - 2015
# யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்



## சுயேட்சைக்குழு- 06
## கணேஷ்வரன் வேலாயுதம் தலைமையிலான சுயேட்சைக்குழு
## தேர்தல் விஞ்ஞாபனம்

போரின் அவலங்களிலிருந்து மக்களை மீட்டு வழமையான ஒரு வாழ்க்கைக்கு அவர்களைக் கொண்டுவந்து, அவர்களையும் தலை நிமிர்ந்து மனிதர்களாக வாழவைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடனேயே நாம் சுயேட்சைக் குழு - 06 மூலமாக யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் அரசியலுக்குள் பிரவேசிக்கின்றோம்.

சிவன் பவுண்டேஷன் மூலமாக 2012 ஆம் ஆண்டு முதல் நாட்டின் பல பகுதிகளிலும் மக்களுக்குச் சேவையாற்றிவந்த நாம், இந்த சேவையை மேலும், விரிவுபடுத்தி பாதிப்புக்களிலிருந்து மீளத்துடிக்கும் மக்களுக்கு உதவும் நோக்கத்துடன்தான் இந்தத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தோம்.

எந்தவிதமான கட்சி, இன, மத சார்பும் இல்லாது மக்களுக்கு சிறந்த சேவையைச் செய்ய வேண்டும் என்பதுதான் எமது குறிக்கோள். கடந்த காலங்களில் அதனை நாம் சிறப்பாகச் செய்திருக்கின்றோம். வறுமையாலும், போரின் அவலங்களாலும் துன்பப்படும் மக்களை கண்டறிந்து அவர்களுக்கான சேவைகளை மேலும் மேம்படுத்தவும், அவர்களின் பிரச்சினைகளை பாராளுமன்றத்துக்குக் கொண்டு சென்று அரசாங்கத்தின் மூலமாக தீர்வைப் பெற்றுக் கொடுப்பதுதான் எமது நோக்கம். தனிமனிதனாக நின்றோ, தனி ஒரு நிறுவனத்தின் மூலமாகவோ மக்கள் எதிர் கொள்ளும் இந்தப் பாரிய பிரச்சினைகளைத் தீர்த்து விட முடியாது.

அதனால்தான் உங்களில் ஒருவனாக, உங்களுடைய பிரச்சினைகள், தேவைகளின் பால் அரசாங்கத்தின் கவனத்தைத் திருப்பும் நோக்கத்துடன், அரசியல் பிரவேசத்தை மேற்கொள்கின்றோம்.

சிவன் பவுண்டேஷன் மூலம் மலையகத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வசிப்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கொடுத்து வந்த நாம், போரால் பாதிக்கப்பட்ட மக்களின் அழைப்பையேற்றே வடபகுதியில் எமது சேவைகளைத் தீவிரப்படுத்தியிருக்கின்றோம். தங்களுடைய பிரச்சினைகளைப் புரிந்துகொண்டவர்கள் என்ற முறையிலும், தம்முடன் ஒருவனாக இருந்து சேவையாற்றக் கூடியவர்கள் என்பதாலும் நாம் பாராளுமன்றம் செல்ல வேண்டும் என்ற மக்களின் கோரிக்கையை ஏற்றே இந்தத் தேர்தலில் நாம் களம் இறங்கியிருக்கின்றோம்.

ஓகஸ்ட் 17 இல் நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த நாம் விளைகிறோம். கட்சி சார்பின்றி, எந்தவித அரசியல் நோக்கமும் இல்லாமல் ஆட்சியைக் கைப்பற்றப்போகும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு, மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான ஒரு தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்காகத்தான் பாராளுமன்றத் தேர்தலில் நாம் போட்டியிடுகின்றோம். உங்களுடைய ஆதரவு எமக்குக் கிடைத்தால் உங்களுக்கான எமது சேவை மேலும் விரிவுபடுத்தப்படும். இதற்கான பல திட்டங்கள் எம்மிடம் உள்ளன. உங்களுடன் ஒருவனாக இருந்து இவற்றை உங்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நான் உறுதி பூண்டுள்ளேன்.

### அகதி வாழ்வுக்கு முடிவு மறுவாழ்வுக்கு ஏற்பாடு

நீண்டகாலப் போர் முடிவுக்கு வந்துவிட்ட போதிலும், போரின் வடுக்களிலிருந்து மீளமுடியாதவர்களாகத்தான் வடபகுதி மக்கள், குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மக்கள் உள்ளார்கள். போர் முடிந்து ஆறு வருடங்கள் சென்றுள்ள போதிலும், இயல்பான வாழ்க்கைக்கு இவர்களில் பெரும்பாலானவர்கள் திரும்பவில்லை. போரால் சொத்துக்களை, உறவுகளை, குடும்பத் தலைவர்களை இழந்து வாழ்வாதாரத்துக்காக ஏங்கும் மக்கள் ஒருபுறம், தமது உடல் உறுப்புக்களை இழந்து வாழ்க்கைக்காக ஏங்குபவர்கள் மறுபுறம் என எமது சமூகத்தில் இருப்பதை அரசியல் தலைவர்கள் கண்டு கொள்வதில்லை.

இதனைவிட, போரின்போது இடம்பெற்ற ஷெல் வீச்சுக்கள், விமானத் தாக்குதல்களின் போது குண்டுகள் துளைத்த பலர் உடலிலிருந்து அவற்றின் துண்டுகளை அகற்ற முடியாதவர்களாக இன்றும் வேதனைப்பட்டுக்கொண்டுள்ளார்கள். வன்னியில் மட்டும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் இவ்வாறிருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

உரிய காலத்தில் இவை அகற்றப்பட வேண்டும். இல்லையெனில் அது அவர்களுக்கு பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தும். இவ்வாறு அடையாளம் காணப்பட்டு எம்மிடம் உதவிக்கு வந்த பலருக்கு சிவன் பவுண்டேஷனின் சார்பில் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு குண்டுகள் அகற்றப்பட்டது.

இவர்களுடைய புனர்வாழ்வுக்கு நிரந்தரமான தீர்வு அவசியம். மத்திய அரசாங்கம், மாகாண சபை என்பன இணைந்து இவ்வாறானவர்களின் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காண வேண்டும். இதனைவிட புலம்பெயர்ந்த மக்களிடமிருந்தும் இதற்கான உதவிகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் இவ்வாறான பணிகளை முன்னெடுப்பதற்கான கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுவது அவசியம். மக்களின் ஆணையைப் பெற்றுக் கொள்வதன் மூலம் அதற்கான ஏறபாடுகளைச் செய்வதற்கு என்னை அர்ப்பணித்துப் பணியாற்றத் தயாராகவுள்ளேன்.

அதேவேளை போரினால் பாதிப்புற்று நிர்க்கதி நிலைக்குள்ளாகி முகாம்களில் ஒரு நேரச் சாப்பாட்டுக்கு வழியின்றித் தவிக்கும் மக்களைப் பற்றி இந்த அரசியல்வாதிகள் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. ஆறு வருடங்களுக்குள் இந்த முகாம்கள் இல்லாதொழிக்கப்பட்டிருக்க வேண்டும். சிவன் பவுண்டேஷன் மூலமாக இவர்களுக்கு கணிசமான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உதவிகள் தொடரப்படும் அதேவேளையில், இவர்களை மீள் குடியேற்றுவதற்கான செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

பாராளுமன்றத்தில் நாம் வலியுறுத்தப்போகும் முதலாவது விடயமாக இது இருக்கும். இதற்கான செயற்திட்டம் ஒன்றையும் வகுத்து நாம் செயற்படுவோம்.

மக்களுக்கு சேவை செய்வது என்பது தேடிச் சென்று செய்ய வேண்டும். அதுதான் உயர்ந்த பண்பாகும். நாம் கடந்த காலங்களாக எவையானாலும் சரி தேடிச் சென்று சொந்த நிதியில் உதவி புரிந்து வருகின்றேன். ஆனாலும் மக்களின் ஆணையைப் பெற்று பாராளுமன்றம் சென்றவர்கள் அரசாங்கத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியை எடுத்து மக்களுக்காக என்ன சேவையைச் செய்துள்ளார்கள் என்ற ஒரு கேள்வி எழுகின்றது. இவற்றை திறம்பட மக்களுக்குச் சென்றடையும் வகையில் செய்வதற்காகவே எம்மைப் பாராளுமன்றம் அனுப்புமாறு நாம் கேட் கின்றோம்.

### வேலைவாய்ப்பு

போருக்குப் பிந்திய நிலையில் வேலைவாய்ப்புப் பிரச்சினை முக்கியமான ஒன்றாக உள்ளது. இந்தப் பிரச்சினைக்குப் பல காரணங்கள் உள்ளன. குடும்பத் தலைவர்களை இழந்தமையால் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பல உருவாகியுள்ளன.

இந்தப் பெண்களுக்கு பொருத்தமான அதேவேளையில் பாதுகாப்பான வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். முன்னாள் போராளிகள் பலர் வேலை தேடிக்கொண்டுள்ளார்கள். சமூகத்தில் அவர்களின் அந்தஸ்தைப் பாதுகாக்கும் வகையில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். வீடு, காணிகளை இழந்து அகதிகளான குடும்பத்தினரும் தமது தொழிலை மீண்டும் செய்வதற்கு வழி தெரியாது நிற்கின்றார்கள். இவர்களுடைய பிரச்சினைக்கு என்னதான் தீர்வு?

கடந்த பல மாதங்களாக வடபகுதியில் மக்களுடன் மக்களாகச் செயற்பட்டதன் மூலம் இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்பவர்களை நேரில் சந்தித்துப் பேசுவதற்கு என்னால் முடிந்துள்ளது. இதன் மூலம் அவர்களின் பிரச்சினைகளை நான் புரிந்துகொண்டிருக்கின்றேன். குறுகியகால, நீண்டகால அடிப்படையில் இவர் களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அதிகளவு வேலைவாய்ப்புக் களை ஏற்படுத்துவதற்கான திட் டங்கள் வகுக்கப்பட வேண்டும். புலம்பெயர்ந்த தமிழ் மக்களு டைய உதவி இதற்காகப் பெறப்பட வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினராக இருந்துகொண்டு இவ்வாறான திட்டங்களை வகுப்பதும், செயற்படுத்துவதும் இலகுவானது என்பது உங்களுக்குப் புரியும். ஆனால், கடந்த காலத்தில் மக்களின் பிரதிநிதிகள் இதற்காக என்ன செய்தார்கள்? இவ்வாறு வடபகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுத்தரக் கூடிய, அவர்களுடைய வளங்களை அதிகளவுக்குப் பயன்படுத்தக் கூடிய திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும்.

### மருத்துவ சேவை

யாழ்ப்பாணத்தில் மருத்துவ சேவை என்பது மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இலவச மருத்துவ சேவை எனச் சொல்லப்படுகின்ற போதிலும், எத்தனை பேருக்கு இது இலகுவாகக் கிடைக்கின்றது? சிறப்பான மருத்துவ சேவையைப் பெறவேண்டுமானால் தனியார் மருத்துவமனைகளுக்குச் சென்று பெருமளவு பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது. அல்லது கொழும்பு செல்லவேண்டியுள்ளது. ஏத்தனை பேருக்கு இதற்கான வசதி உள்ளது. ஆதனால், குடாநாட்டிலுள்ள அரசாங்க மருத்துவமனைகள் அனைத்திலும் வறுமைக் கோட்டில் வாழும் மக்கள் இலகுவான முறையில் சேவையைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் கிடைக்கக்கூடிய அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்துவோம்.

தேர்தல் காலத்தில் மட்டும் வரும் அரசியல்வாதிகளல்ல நாம். கடந்த பல வருடங்காளா கவே சிவன் பவுண்டேஷன் மூல மாக மக்களுடன் மக்களாக நினறு நாம் பணியாற்றிவந்திருக்கின்றோம். எமது சேவை நாடு முழுவதற்கும் உரியது. குடாநாட்டு மக்களின் ஆணையுடன் எமது சேவையை நாடு முழுவதும் விஸ்தரிப்பதுதான் எமது இலக்கு. நீங்கள் எமக்கு அளிக்கப் போகும் வாக்கு எமது சேவைக்கு நீங்கள் வழங்கும் அங்கீகாரம்!


அன்புடன்,


**கணேஸ்வரன் வேலாயுதம்.**

தலைவர், சுயேச்சைக்குழு - 06.



(சி-528)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் போராளிகளை ஒன்றிணைக்க இவர் யார்...?



முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை ஒன்றிணைத்து, 'ஜனநாயகப் போராளிகள்' என்ற கட்சியை உருவாக்கி, நடைபெறும் பொதுத் தேர்தலில் சிலந்திச் சின்னத்தில் சுயேச்சைக் குழுவாகக் களமிறக்கும் பணியை முன்னெடுத்திருக்கிறார் மூத்த தமிழ் ஊடகவியலாளர் என். வித்தியாதரன். அந்த சுயேச்சைக் குழுவின் முதன்மை வேட்பாளராகவும் அவரே உள்ளார்.

விடுதலைப் புலிகள் போராளிகளை ஒன்றிணைப்பதற்கு இவர் யார்? என்ன உரித்து – அருகதை – உடையவர்? – என்று கேள்வி எழுப்புகின்றனர் – நண்பன் வித்தியின் முப்பத்தியைந்து ஆண்டு கால ஊடக சரித்திரம் தெரியாதவர்களும் அறியாதவர்களும்.

அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த கிரிக்கெட், உதைபந்தாட்ட, கூடைப்பந்தாட்ட, ஹொக்கி வீரர். சிறந்த மெய்வல்லுநரும் கூட. இலங்கைத் தேசிய இளைஞர் உதைபந்தாட்ட அணியின் கோல் காப்பு வீரராக சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றியவர்.

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரான பொன்னம்மானின் சக தோழர். பொன்னம்மானின் சகோதரரான யோகி இவரது கிரிக்கெட் பயிற்சியாளர்.

தமிழர் உரிமைக்காக தலைவர் பிரபாகரன் ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கிய காலமும் அதே தமிழர் உரிமைகளுக்காகக் குரல் எழுப்ப வித்தி பேனா என்ற ஆயுதம் தூக்கிய காலமும் ஏறத்தாழ ஒன்று.

இந்தியாவில் படைத்துறைப் பயிற்சி பெற்ற விடுதலைப் புலிகளின் முதல் இரு படையணிகளிலும் இடம்பிடித்த பல பத்துப் போராளிகள் வித்தியின் நண்பர்கள் அல்லது பள்ளிக்காலத் தோழர்கள். அதனால் வித்திக்கும் புலிகள் இயக்கத்துக்குமான நட்பு, புரிந்துணர்வு, ஈடுபாடு என்பன மூன்று தசாப்த காலத்துக்கு முந்தியே இறுக்கமானது.

இவரது பேனாவின் – எழுத்தின் – கூர்மை கண்டு தலைவர் பிரபாகரனினாலேயே பல தடவைகள் மெச்சப்பட்டவர் வித்தி. இலங்கைத் தமிழர் வரலாற்றில் தலைவர் பிரபாகரனை அடிக்கடி சந்தித்து, மனம் விட்டுப் பேசி, பேட்டிகண்டு, அளவளாவவும் வாய்ப்புப் பெற்ற ஒரே ஊடகவியலாளரும் அவர்தான். தலைவர் சமைத்த உணவை அவருடன் பகிர்ந்துண்ணும் அளவுக்கு தலைவருடன் மிக நெருக்கமானவர்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தினால் என்றும் மதித்து, நட்புப் பாராட்டி, உயர்த்தப்பட்டவர் ஊடக ஜாம்பவான் வித்தியாதரன் என்றால் அதில் தவறில்லை. வித்தியின் ஆசிரிய தலையங்கங்கள் ஊடாக பாலாவின் கருத்து நிலைப்பாட்டை தரிசிக்க முடியும் என்று கருதிய மேற்குலக இராஜதந்திரிகள் அதன் காரணமாக வித்தியின் எழுத்துக்களை தத்தமது மொழிகளுக்கு மொழிபெயர்க்கவென தனி அலுவலர்களைத் தங்களுடன் வைத்திருந்த ஒரு தசாப்தம் இருந்தது.

உதயனின் கால் நூற்றாண்டு சரித்திரத்திலும் சுடர்ஒளியின் முதல் தசாப்த வரலாற்றிலும் ஊடகப் போராளி வித்தியே மையவிசை; அச்சாணி.

திம்புவுக்குப் பிறகு விடுதலைப் புலிகள் இலங்கை அரசுடன் நடத்திய அனைத்துப் பேச்சுக்களிலும் – அது பிரேமதாஸா அரசு கொழும்பில் புலிகளுடன் நடத்திய மூன்று, நான்கு சுற்றுப் பேச்சுக்களாகட்டும், சந்திரிகா அரசு யாழ்ப்பாணத்தில் நடத்திய இரண்டு சுற்றுப் பேச்சுக்களாகட்டும், ரணிலின் அரசு தாய்லாந்து, ஜப்பான், நோர்வே, ஜேர்மனி என்று பல்வேறு நாடுகளின் ஆறு நகரங்களில் நடத்திய பேச்சுகளாகட்டும், மஹிந்த ராஜபக்ஷ அரசு ஜெனீவாவில் நடத்திய இரண்டு சுற்றுப் பேச்சுக்களாகட்டும் – அனைத்தின்போதும் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துக்கும், அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மற்றும் ஏனைய புலிகளின் தலைவர்களுக்கும் பக்கத்தில் எப்போதுமே தவறாது பிரசன்னமாகி இருந்து தமிழர் தரப்பு செய்திகளை உலகுக்கு முரசறையும் உரிமை வித்திக்கு மட்டுமே இருந்தது.



தலைவரின் விருந்தில் தமிழ்ச்செல்வனுடன் ஊடகவியலாளர் வித்தி.



தலைவர் பிரபாகரனுடன் ஊடகவியலாளர் வித்தியாதரன்.

பேச்சு மேசைக்கு முன்பும், பின்பும், வெளியேயும் கட்டவிழ்ந்த பல இராஜதந்திர நகர்வுகளின் சூத்திரதாரியாகவும், பங்காளியாகவும் வித்தி ஆற்றிய பணி தனி சரித்திரமாக வரையத்தக்கது.

மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் – அடேல் பாலசிங்கம் தம்பதியரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அவர்களின் தத்துப் பிள்ளை வித்தி. பாலா அண்ணன் தமது இறுதிக் காலத்தில் – இறுதி ஐந்து வாரங்கள் – தம்முடன், தமது இல்லத்தில் அருகே வைத்திருந்து, தமது மனத்துள் புதைந்து கிடந்த இரகசியங்களை, உள்ளத்து உணர்வுகளை, அலைமோதிய கொதிப்புக்களை வித்தியுடன் பரிமாறி, அவரிடம் விட்டுச் சென்றார் என்பது தெரிந்த செய்தி.



மதியுரைஞர் அன்டன் பாலசிங்கத்தின் நெருங்கிய சகா வித்தியாதரன். பாலா அண்ணனின் கடைசிப் படம் இதுதான்.



உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மானுடன் ஊடக நண்பனாக வித்தியாதரன்.

அந்தத் தீர்க்கத்தரிசி அன்றிட்ட பணியை இன்று செய்கிறேன் என்கிறார் வித்தி. தலைவர் பிரபாகரன் பிரபல பத்திரிகைகளை வாசிக்கும் படங்கள் நான்கு வகையில் வெளியாகின. இரண்டு விடுதலைப் புலிகள் இயக்க சார்பு ஏடுகள். ஒன்று – 'வெளிச்சம்' சஞ்சிகை. மற்றது – 'Tamil Guardian'. அடுத்த இரண்டும் – உதயன், 'சஞ்சீவி'யும், 'சுடர்ஒளி'யும். அப்படி அந்த இதழ்களைத் தலைவர் தாங்கியிருக்கும் படங்களை வெளியிட்டதன் மூலம் தலைவரின் – விடுதலைப் புலிகளின் – முக்கிய செய்திகள் இந்த நான்கின் ஊடாக மட்டுமே வெளியாகும் என்ற செய்தி அப்போது உலகுக்கு உணர்த்தப்பட்டது. 'உதயன்' – 'சஞ்சீவி' மற்றும் 'சுடர்ஒளி' சஞ்சிகைகளை தலைவர் பிரபாகரனின் கைகளில் கொடுத்து அந்தப் படங்களை பிடித்தவரே வித்திதான்.

புலிகள் இயக்கத்துக்கும் வித்திக்குமான தொடர்பு – அன்னியோன்னியம் – புரிந்துணர்வு – தென்னிலங்கைத் தலைவர்களான ஜனாதிபதிகள் பிரேமதாஸா, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என எல்லோராலும் நன்கு அறியப்பட்டதுதான்.

மதியுரைஞர் பாலசிங்கத்துக்கும் வித்திக்கும் இடையிலான நெருங்கிய புரிந்துணர்வும் நட்புமே யுத்த நெருக்கடிகளுக்கு மத்தியில் பல சமதான முயற்சிகள் முளைவிடுவதற்குக் காரணமாக அமைந்தன என்பதும் உலகறிந்த இரகசியம். ஆயதம் தாங்கிய மறப்போருக்கு மத்தியில் பேனாவோடு அறப்போர் நடத்திய ஒருவர் புலிகள் போராளிகளை அறவழிப் பாதையில் ஒன்றிணைப்பது சாலப் பொருத்தமானதும் மிகச் சிறப்பானதும்தானே...!

–வித்தியின் நண்பர்கள்–




2009 யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் மக்கள் இழப்புக்களை அம்பலப்படுத்திய குற்றத்திற்காக வித்தி கடத்தப்பட்டு, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு, 'பயங்கரவாதி'யாக சித்தரிக்கப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது அவரை விடுவிக்கக் கோரி சென்னையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது.....


முன்னர் களச் சமராடிய விடுதலைப் புலிகள்
ஜனநாயகப் போராளிகளாக உங்களின் முன்னால்
யா.மாவட்ட நாடாளுமன்றத் தேர்தலில்
சுயேச்சைக் குழு 4 இல்
சிலந்திச் சின்னத்தில் ...
இப்போது....
X
(140)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத்தேர்தல் 2015



## அபிவிருத்திக்கும் சமாதானத்திற்கும் கரம் கொடுப்போம்



அன்பு உள்ளங்களே!

சுயகௌரவம் மிக்க அமைதி வாழ்வே எமது இன்றைய இன்றியமையாத் தேவை. இதற்காக நாம் இழந்தவை பல.
எம் உயிர்கள் , உடைமைகள் , உரிமை-வாழ்வு , பாரம்பரியம் , நில புலங்கள் யாவற்றையும் இழந்தோம்.
ஆயினும் இன்று வரை நாம் எதிர்பார்த்த கௌரவமான , சுயாதீனமான , அமைதி நிறைந்த வாழ்வு எமக்கு கிடைக்கவில்லை.
எமது அரசியலில் புதிய சிந்தனைகள் மாற்றங்கள் ஏற்படாவிடின் எம் வாழ்விற்கு விமோசனம் இல்லை.
நாம் எல்லோரும் இணைந்து நல்லாட்சிக்கான சூழலை ஏற்படுத்தினோம். ஆயினும் இனவாதமும் நிலைமாறும் தலைமைகளும் வாய்ப்புக்களை வீணடித்து விட்டன. இந்நிலையில் தென் இலங்கையின் புரிந்துணர்வு மிக்க , நேர்மையான , ஆக்கபூர்வமான நேச சக்திகளுடன் இணைந்து தமிழ் மக்களின் நல்வாழ்வையும், சுயகௌரவத்தையும் முதன்மைப்படுத்தி நாம் ஐக்கிய தேசியகட்சியின் யானைச்சின்னத்தில் தேர்தல் களம் நுழைந்துள்ளோம்.
இனவாத மற்றும் சுயநலம் மிக்க அரசியல்வாதிகளை நிராகரித்து எம்மை வெற்றி பெறச்செய்து புதிய நிலைமாற்றத்தையும், நல்லாட்சியையும் ஏற்படுத்த தங்களை அன்புடனும் , உரிமையுடனும் கோருகின்றோம்.
எமது வெற்றி மூலம்

நிலையான அரசியல் தீர்வை அடைந்திட ...., எமது பிரதேசங்கள் அபிவிருத்தி பெற்றிட .....
இளையோரின் தொழில் வாய்ப்பு பெருகிட..., எமது தொழில்துறைகள் தன்னிறைவு கண்டிட .....
தடுப்பிலுள்ளோர் விடுதலை பெற்றிட ..., எமது நிலங்களை மீண்டும் எம் வசமாக்கிட .....
கலாசார விழுமியங்கள் பேணிட..., சட்டமும், ஒழுங்கும் மேம்பட ...,
கல்வி, சுகாதார, போக்குவரத்து சேவைகள் உயர்ந்திட வழிவகுப்போம்.




புரட்சித் தலைவி
திருமதி விஜயகலா மகேஸ்வரன்
முன்னாள் மகளிர் விவகார பிரதி அமைச்சர்
ஐ.தே.கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர்

3



துணிச்சல் மிக்க தலைவன்
திரு குமாரு சர்வானந்தன் (சர்வா)
ஐ.தே.கட்சி பிரதேச சபை உறுப்பினரும்
தென்மராட்சி அமைப்பாளரும்

2



ஆன்மீகத் தொண்டன்
திரு இளையதம்பி நாகேந்திரராஜா
ஓய்வு பெற்ற அதிபர்

1

நீங்கள் யானைச்சின்னத்திற்கு புள்ளடியிட்டு இலக்கம் 3 , 2 , 1 என்பவற்றிற்கு
உங்கள் விருப்பு வாக்குகளை அளித்து எங்களை வெற்றி பெறச்செய்யுங்கள்

ஐக்கிய தேசியக்கட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலட்சிய பாதையில் வெற்றியை நோக்கி வைராக்கியத்துடன் பயணிக்க வேண்டும்!

## முன்னாள் எம்.பி.ஸ்ரீகாந்தா தெரிவிப்பு



**தேர்தல் விசப்பரீட்சைகளுக்கு இடமில்லை. எமது திட்டவட்டமான நிலைப்பாட்டை மீண்டும் நாம் வெளிப்படுத்த வேண்டும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை உணர்ந்த வர்களாக எமது இலட்சியப் பாதையில் வெற்றியை நோக்கி வைராக்கியத்துடன் தொடர்ந்து பயணிக்க வேண்டும் என மாலி சந்தியில் நடைபெற்ற தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட வேட்பாளருமான சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.**

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடந்து முடிந்த நீண்ட யுத்தத்தின் விளைவாக தமிழ் மக்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் ஏராளமானவை. இழப்புக்கள் எண்ணில் அடங்காதவை.

இனிமேலும் எமது மக்கள் தொடர்ந்து வேதனைகளையும் சோதனைகளையும் அனுபவிக்கக்கூடாது.

தமது சொந்த மண்ணில் உரிமை வாழ் வினை எமது மக்கள் பெற்றாக வேண்டும். எமது தாயகமான வட- கிழக்கு மாகாணத்தில் பூரணமான அதிகாரங்களுடன் சுயாட்சி அரசு ஒன்றினை இலக்கு வைத்து நாம் செயற்பட வேண்டும்.

எமது தாயகத்தில் எமக்கு சுயாட்சி வேண்டும் என்று கோருவதற்கு எமக்கு உரிமையுண்டு. எமது மண்ணில் சுதந்திரத்தையும் சுபீட்சத்தையும் சுயாட்சி அரசு ஒன்றின் ஊடாகவே நாம் உறுதிப்படுத்த முடியும்.

எமது எதிர்காலம் எமது கைகளிலேயே தங்கியுள்ளது. ஒற்றுமையுடனும் இலட்சிய உறுதியுடனும் இடைவிடாது செயற்பட்டால் எமது இலட்சியத்தை நாம் அடைய முடியும்.

இன்று எமது இனம் ஒற்றுமைப்பட்டு நிற்கின்றது. இந்த ஒற்றுமையை நாம் கட்டிக்காக்க வேண்டும். இந்த ஒற்றுமையை உடைக்க எமது இனத்தின் எதிரிகள் திட்டமிட்டு செயற்படுகின்றார்கள்.


தமிழ் இனத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்கிக்கொண்டி ருக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை ஆத ரித்து அதற்கு மேலும் வலிமை சேர்க்க வேண்டும்.

ஒரே கொடி, ஒரே தலைமை என்று செயற் பட்டால் மாத்திரமே எமது அடிமை விலங்குகளை நாம் உடைத்தெறிய முடியும்.

எமது ஆயுதப் போராட்டம் முறியடிக் கப்பட்டாலும் எமது தேசிய விடுதலைப் போராட்டம் அரசியல் வழியில், ஜனநாயக ரீதியாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. வெற்றி கிட்டும் வரையில் நாம் முயன்று முன்னேறிச் செல்ல வேண்டும். இதனை விட எமது இனத்தின் விமோசனத்திற்கு வேறு வழி கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உரிமைகளை வென்றெடுக்கும் காலம் நெருங்கி வந்துள்ளது

## வேட்பாளர் அருந்தவபாலன் நம்பிக்கை



நடைபெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தல் எமது போராட்டத்தின் இன்னொரு திருப்புமுனையாக இருக்கும். ஏனெனில், சர்வதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் இருக்கின்ற அரசியல் சூழ் நிலைகளில் நாங்கள் எங்களுடைய உரிமைகளை வென்றெடுப்பதற்கான காலம் மிக நெருங்கி வந்துள்ளதை எங்களால் உணர முடிகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் அருந்தவ பாலன் தெரிவித்துள்ளார்.

நெல்லியடியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு உரையாற்றியுள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நாங்கள் மிக அவதானத்துடன் நடந்து கொண்டு இந்தத் தேர்தலை ஒரு நல்ல வாய்ப்பாக பயன்படுத்தக்கூடியவர்களாக இருக்க வேண்டும். எப்போதும் போராடுகின்ற அல்லது அரசியல் உரிமைகளை வென்றெடுக்க இருக்கின்ற ஒரு இனம் அதன் பேரம் பேசும் சக்தியை தக்க வைத்துக் கொள்வது மிகவும் அவசியமாக இருக்கின்றது.

அந்த வகையில் பேரம் பேசும் சக்தியென்பது இன்றைய சூழ்நிலையில் எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் தான் தங்கியிருக்கின்றது.

அவ்வாறானதொரு நிலையில் மிகவும் காத்திரமான பங்களிப்பை நாங்கள் செய்து எங்களது அரசியல் உரிமைகளை அடைவதற்கு நல்லதொரு பேரம் பேசும் வலுவைக் கொண்டு அந்த உரிமைகளை வென்றெடுக்க முடியுமென நம்புகின்றோம்.

எங்களைப் பொறுத்த மட்டில் பலம்தான் ஒன்று. முக்கியமாக இருக்கிறது. சர்வதேச ரீதியாக எம்முடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கான உந்துதல்களும் அழுத்தங்களும் இலங்கை அரசாங்கத்தின் மீது விழுந்த வண்ணமே இருக்கின்றது.

அது எதிர்காலத்தில் மேலும் கூர்ப்படையுமென்று நாங்கள் எதிர்பார்க்கலாம். அத்தகைய சூழ்நிலையில் நாங்கள் ஒற்றுமையாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பலமாக இருக்கின்ற போதுதான் எங்களுடைய இந்த இலட்சியங்களை அடைந்துகொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# ஆதரவைக் குழப்ப மேற்கொள்ளும் பொய் பரப்புரைகளை நம்பாதீர்கள்

## வேட்பாளர் மணிவண்ணன் வேண்டுகோள்



எமக்கு ஆதரவாக பாரிய மாற்றம் ஏற்பட்டு வரும் நிலையில் அதனை குழப்புவதற்கு திட்டமிட்ட பொய்களை பரப்பி வருபவர்களை நம்பாமல் உறுதியாக எமக்கு வாக்களிக்க வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னிணியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, ஒரு நாடு, இரு தேசம் என்ற கொள்கையின் கீழ் தாயக உறவுகளையும் புலம் பெயர்ந்த உறவுகளையும் ஒன்று திரட்டி இன அழிப்புக்கு எதிரான சர்வதேச மக்கள் சார்பாக விசாரணையை தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் வலியுறுத்தி வருகின்றோம்.

கடந்த கால செயற்பாடுகளுக்கான அங்கிகாரத்தையும் எமது கோட்பாடுகளையும் அடைய தமிழ் மக்கள் ஒன்றிணைய வேண்டும்.


புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் தமிழக மக்களும் ஓரணியில் ஒன்றுதிரண்டுள்ளார்கள். தமிழ்த் தேசிய மக்கள்முன்னணியின்கொள்கையின் பாற்பட்ட உண்மையான ஒற்றுமை தற்போது தான் ஏற்பட்டுள்ளது.

எனவே, தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு மக்களோடு ஒன்றாக நிற்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு உறுதியாக வாக்களிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

**தேர்தல் வியூகம்**

# மக்களின் உண்மையான விடிவுக்காக நாம் மாறுபட்ட அரசியல் களத்தில்

## வேட்பாளர் கோபிகிருஷ்ணன் தெரிவிப்பு



தேசியவாதத்தால் புறக்கணிக்கப்பட்ட சமூகத்தில் இருந்து எமது மக்களின் உண்மையான விடிவுக்காக நாம் இன்று மாறுபட்ட அரசியல் களத்தில் வந்துள்ளோம் என வன்னி.மாவட்டத்தில் சுயேட்சைக்குழு 4 இல் பட்டம் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் ந.கோபிகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், எழுச்சிப் போராட்ட காலத்தில் சகல அகதி வாழ்க்கையையும் அனுபவித்து காலம் காலமாக தமிழ்த் தேசியத்தை ஆதரித்தும் வந்த நாங்கள், எம் சமூகத்தை ஏமாற்றும் அரசியலுக்கு அப்பால் எதை உயிர், உடல், உடமை, ஆன்மா அனைத்தையும் எமது மக்களுக்காக தியாகம் செய்வதாக உறுதிகொண்டுள்ளோம்.

எமது மக்களுக்கு தீர்க்கமான அரசியல் தீர்வும், சகல விதமான அபிவிருத்திகளும் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் கொண்ட கொள்கையில் விலை போகாத தலைமையின் கீழ் தமிழ் மக்களின் ஆதரவுடன் எமது கொள்கைகளை வெல்வோம்.

நாங்கள் இந்தத் தேர்தல் களத்தில் சுயேட்சைக்குழுவாக நிற்பதுயாருடைதூண்டுகோலோ அல்லது விலைபோகியோ, அன்றி எம் இனத்திற்கு எதிராகவோ வாக்குகளை பிரிப்பதற்காகவோஇல்லை. இந்த தேர்தல் களத்தில் சுயமாகவும் எமது சொந்தப் பணத்தாலும் எமது மக்களுக்காகவும் எமது மண்ணுக்காகவும் ஒடுக்கப்பட்ட சமூகத்திற்காகவும் பிற சமூகம் சார்ந்த அரசியல்வாதியால் எம் மக்கள் ஏமாற்றப் படுவதாலும் எம் சமூகம் ஏமாற்று அரசியலுக்கு எதிராகவே வந்துள்ளோம்.

எமது நிலமும் எமது இனமும் அடிபட்டு போவதை கை கட்டி வாய் பொத்தி பார்த்துக் கொண்டிருக்கும் மக்கள் பிரதிநிதி என்று சொல்பவர்களுக்கு எதிராகவும் எமது மக்களின் ஏக்கங்களை போக்கிக் கொள்வதற்காகவும் சரியான முறையில் மக்கள் பிரதிநிதி செயற்படாவிட்டால் வாக்காளர் ஒவ்வொருவரும் வேட்பாளர்களாக எப்பவும் மாறுவான் என்பதை தெரியப்படுத்தவும் நாம் இன்று உறுதியுடன் நீதியான கொள்கையுடனும் விலை போகாதவர்களாக எம் மக்களுக்காகவும் மண்ணுக்காகவும் இத் தேர்தலில் போட்டியிடுகிறோம்.

இந்த மாறுபட்ட அரசியல் களத்தில் வந்துள்ள எம்மை வன்னி வாழ் மக்கள் ஆதரித்து எம்மையும் உங்களின் விடிவுக்காய் நாடாளுமன்றம் அனுப்புவீர்கள் என நம்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# இறுதிவரை மக்களுடன் சேர்ந்து போராடத் தயாராகவுள்ளோம்

## வேட்பாளர் கோகிலவாணி தெரிவிப்பு



வரலாறு எம்மை விடுதலை செய்யும் என்ற கடந்த காலக் கனவுகளை நிதர்சனமாக்கும் இலட்சிய நோக்குடன் கூடிய எம் மக்களாகிய உங்களுடன் சேர்ந்து இறுதிவரை போராடத் தயாராக உள்ளோம் என தமிழ்த்தேசிய மக்கள்முன்னணியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் சி.கோகிலவாணி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

காலத்துயர் சுமந்தவர்களாகக் கண்களில் வெறும் நம்பிக்கைகளை மட்டுமே தேக்கி வைத்துக் கொண்டு இங்கே பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் குழுமியிருக்கும் உங்கள் முன், உங்களைப் போன்றே சுதந்திரம், விடுதலை, மாற்றங்கள் பற்றிய கனவுகளுடன் அதற்காக மேலும் உழைக்க வேண்டும், போராட வேண்டும் என்ற மன உறுதியுடனும் சிந்தனையுடனும் செயற்படக் காத்திருக்கும் ஒரு மன உறுதி கொண்டவர்களாக எங்கள் எண்ணங்களை, கருத்துக்களை உங்களிடம் பகிர்ந்து கொள்ள நாங்கள் இங்கு முன்வந்திருக்கின்றோம்.

2009 களில் இலங்கையின் வடபுலத்திலே ஒரு மிகக் குறுகிய நிலப் பரப்பிலே இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பின் பின்னர எம் மக்கள் சந்திக்கின்ற இரண்டாவது பாராளு மன்றத் தேர்தல் இது. எங்கள வீட்டு மதில்களில், எங்கள் கடை வீதிகளில், எங்களூர் மரங்களில் முகம் தெரியாத பல பிரமுகர்கள் கைகூப்பிப் புன்முறுவல் செய்யும் நேரம் இது. எங்களூர் குச்சொழுங் கைகளிலும் வாகனச் சக்கர அடையாளங்கள் பல காலணித் தடங்கள் தெரியும் காலம் இது.

பதிப்பக இயந்திரங்கள் ஓய்வு கேட்டுக் கெஞ்சுகின்ற வேளை இது. மறந்து போன முகங்களை ஒருமுறை நேரடியாகவும் ஊடகங்கள் வாயிலாகவும் மக்களுக்கு மீளவும் நினைவுபடுத்தும் அவசரத்தில் எங்களது பழைய அரசியல்வாதிகள். ஏனென்றால் இது தேர்தல் காலம்.

30 ஆண்டுகளாக நடத்தப்பட்ட போரில் நாங்கள் சந்தித்த பேரழிவுகளை, அதிலும் இலங்கை அரசால் இறுதிக் கட்டப் போரில் "மனிதாபிமான இராணுவ நடவடிக்கை" என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட இன அழிப்பில் எம் மக்கள் எதிர்கொண்ட கொடூரங்கள் இந்தச் சந்ததி அழிந்து ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடந்தாலும் அழியாத வடுவாக எங்கள வரலாற்றில் மீண்டும் மீண்டும் நினைவு படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கும்.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் கட ந்து போய் விட்ட 5 வருடங்களையும் இந்த இடத்தில் நாங்கள் ஒருமுறை நினைத்துப் பார்ப்போம். கையறு நிலையில் சொந்த மண்ணிலேயே ஏதிலிகளாக நாங்கள நின்ற நிலையின் நினைவுகள் எந்த பிறவியிலும் எங்களை விட்டு அகலப் போவதில்லை. 2009 மே மாதத்தின் பின்னர் எங்கள் வாழ்வியலே முற்று முழுதாக மாறிப் போனது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடப்பட்ட குடிநீர் விற்பனை நிலையங்களை திறக்க அனுமதிக்குமாறு நேற்று ஆர்ப்பாட்டம்



(வவுனியா)

வவுனியாவில் அனுமதி பெறாது சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்களை விற்பனை செய்யும் நிலையங்கள் மூடப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வவுனியா பிராந்திய சுகாதார பணிமனைக்கு முன்னால் இவ் ஆர்ப்பாட்டம் நேற்று காலை இடம் பெற்றது. இது தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வவுனியா நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய பிராந்திய சுகாதார பரிசோதகர்களால், குடிநீரை சுத்திகரித்து குறைந்த விலையில் விற்பனை செய்த நிலையங்கள் மீது திடீர் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது நான்கு நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சுகாதார பரிசோதகர்களின் திடீர் சோதனை நடவடிக்கை காரணமாக வவுனியாவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களைப் பூட்டிய வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் சிலரும் இணைந்து அவற்றை மீள திறக்க அனுமதிக்குமாறு கோரி பிராந்திய சுகாதார பணிமனைக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

பிராந்திய சுகாதார பரிசோதகர்களை இது தொடர்பில் வினவிய போது, முறைப்படி அனுமதி பெற்றால் இயங்குவதற்கு அனுமதி வழங்கப்படும். உரிய வசதிகள் செய்யப்பட்டு, குடிநீர் பாதிப்பு இல்லாத வகையில் வழங்க வேண்டும். எமது பணிமனையால் கடந்த காலத்தில் கூறப்பட்ட அறிவுறுத்தல்களை இவர்கள் பின்பற்றாமை காரணமாகவே நீதிமன்றம் ஊடாக நடவடிக்கை எடுக்கப் பட்டது என அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, சம்பவ இடத்திற்கு வருகைதந்த வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சண் அபேயவர்த்தன, சுகாதார பரிசோதகர்களுடனும் ஆர்ப்பாட்டக்காரருடனும் கலந்துரையாடினர். அதன் பின்னர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை விற்பனை செய்யும் நிலையங்களை மீள திறக்க அனுமதி வழங்கியதுடன் உடனடியாக சுகாதார பரிசோதகர்களால் கூறப்பட்ட அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்துமாறும் அறிவுறுத்தினர். (2)

## தரம்-5 வகுப்புத்தடை உத்தரவு குறைப்பு

(மல்லாவி)

நாடு தழுவிய ரீதியில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் ஐந்து நாட்களுக்கு முன்பிருந்தே மேலதிக நேர வகுப்புக்கள், விரிவுரைகள், கருத்தரங்குகள் என்பன நடத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை கல்வி அமைச்சு மீளாய்வுக்கு உட்படுத்தியுள்ளது.

இதற்கமைய தடை மூன்று நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

பரீட்சை நடைபெறவுள்ள திகதிக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் மேற்படி அனைத்தும் நடத்துவதற்கு எதுவித தடையும் இடையூறாக அமையாது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (2-15)




## மோ.சைக்கிளை ஹயஸ் மோதியது

### இருவர் காயம்

(திருவையாறு)

முன்னால் பயணித்த மோட்டார் சைக்கிளை பின்னால் வந்த ஹயஸ் வாகனம் மோதித்தள்ளி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று காலை 8.15 மணியளவில் கிளிநொச்சி அந்தோனியார் ஆலயம் முன்பாக இடம்பெற்றது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் சிறுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சியிலிருந்து பரந்தன் நோக்கி பயணித்த இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிளை அதே பாதையால் பயணித்த ஹயஸ் வாகனம் மோதித் தள்ளிவிட்டு தப்பிச் சென்றுள்ளது. இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இராணுவ வீரர்களும் சிறுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

தகவல் அறிந்த கிளிநொச்சி பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (2-273)

## யுவதிகளை கத்தியால் வெட்டிய நபர் தற்கொலைக்கு முயற்சிப்பு

### வங்காலையில் சம்பவம்

வீடொன்றினுள் அத்துமீறி உள் நுழைந்த ஆசிரியர் ஒருவர், இரு யுவதிகளை கத்தியால் சரமாரியாக வெட்டி படுகாயம் அடையச் செய்ததுடன் தானும் கழுத்தை அறுத்து தற்கொலை செய்ய முயன்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் மன்னார் வங்காலை கிராமத்திலுள்ள இரண்டாம் வட்டாரத்தில் கடந்த 8 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.45 மணியளவில் இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, மன்னார் வங்காலை கிராமத்திலுள்ள இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்வராஜ் றெஜீனா குளாஸ் என்பவரது வீட்டில் மன்னார் மாவட்டத்திலுள்ள பிரபல பாடசாலையொன்றில் ஆசிரியராக கடமையாற்றுபவரும் வங்காலை ஐந்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த குடும்பஸ்தவரான ஆசிரியர் ஒருவரே இவ்வாறு அத்துமீறி குறித்த வீட்டினுள் நுழைந்துள்ளார்.

வீட்டில் பெற்றோர் வெளியே சென்ற வேளை 26 மற்றும் 28 வயதுகளைக்கொண்ட இரு யுவதிகள் மட்டுமே இருந்துள்ளனர்.

பிரஸ்தாப ஆசிரியர் தன்னுடன் எடுத்துச் சென்ற கத்தியால் இரு யுவதிகளின் முகம், கை, கழுத்து ஆகிய பகுதிகளில் மூர்க்கத்தனமாக சரமாரியாக வெட்டி னார்.

இதனைத் தொடர்ந்து தனது கழுத்தையும் அறுத்துக்கொண்டு தற்கொலை செய்யவும் முயன்றார்.

யுவதிகளின் அவலக்குரல் கேட்ட அயலவர்கள் மற்றும் வீதியால் சென்ற பொதுமக்கள் ஆகியோர் இரத்த வெள்ளத்தில் கிடந்த மூவரையும் மீட்டு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்தனர். சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-15)

## சாலை முகாமையாளரை வெளியேறுமாறு கதவைப்பூட்டி பணிப்புறக்கணிப்பு போராட்டம்

(மல்லாவி)

இலங்கை போக்குவரத்து சபையின் முல்லைத்தீவு சாலையின் முகாமையாளர் தொடர்ச்சியாக சாரதிகள், நடத்துநர்கள் ஆகியோருடன் கருத்து முரண்பாடு பிரச்சினைகளை ஏற்படுத்துவதாகவும் இதனால் அவருடன் தொடர்ந்து பணி புரிய முடியாது எனத் தெரிவித்து சாலை ஊழியர்கள் பேருந்துசாலையிலிருந்து வெளிபுற கதவைப்பூட்டி தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் இடம் பெற்றது.

இச்சம்பவம் கடந்த 11 ஆம் திகதி பிற்பகல் 2 மணி தொடக்கம் நான்கு மணி வரை இடம்பெற்றது.

இது குறித்து தெரியவருவதாவது, இ.போ.சபையின் முல்லைத்தீவு சாலை முகாமையாளர், அங்கு கடமையாற்றிவருகின்ற சாரதிகள், நடத்துநர்கள், பணியாளர்கள் ஆகியோருடன் தொடர்ச்சியாக முரண்பட்ட நிலையில் செயற்பட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 11ஆம் திகதி காலை தூரசேவையில் ஈடுபட்டு திரும்பிய சாரதிகள், நடத்துநர்களுடன் முகாமையாளர் முரண்பட்டுள்ளார்.

இதனை அடுத்து அன்றைய தினம் பிற்பகல் 2 மணியளவில் ஒன்று திரண்ட பேருந்தின் சாரதிகள், நடத்துநர்கள், பணியாளர்கள் முகாமையாளரையும் அலுவலக உத்தியோகத்தர்களையும் பேருந்துகளையும் சாலையைவிட்டு வெளியேறவிடாது வெளிப்புற் கதவைப் பூட்டி பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் இ.போ. சபை தலைமையகம், வட பிராந்திய தலைமையகம் ஆகியவற்றிற்கு ஊழியர்கள் முகாமையாளரை பணியில் இருந்து இடமாற்றம் செய்யும்வரை தாம் பணிப்புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை தொழிற்சங்க ரீதியாக நடத்துவோம் என அறிவித்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்து தலைமையக அதிகாரிகள் சாலை முகாமையாளருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இவ்விடயம் தொடர்பான விசாரணை நடைபெறும் வரை முல்லைச்சாலையின் பொறுப்புக்கள் அனைத்தையும் துணைப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்து விட்டு இ.போ.சபையின் யாழ்.வட பிராந்திய தலைமையுகத்தில் கடமையினை தற்காலிகமாக தொடருமாறு பணிப்புரை விடுத்துள்ளனர்.

இதனை அடுத்து அன்றைய தினம் பிற்பகல் 4 மணியளவில் தனது பொறுப்பினை உரியவரிடம் ஒப்படைத்து விட்டு அவர் வெளியேறியுள்ளார்.

இதன் பின்னர் போராட்டம் கைவிடப்பட்டு பொதுமக்களுக்கான பேருந்து சேவைகள் அன்றைய தினமே வழமைக்குத் திரும்பியது. (2-15-302)




உலக இரத்ததான நிகழ்வையொட்டி கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்தவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி பழைய வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது...

(படங்கள்:- கிளிநொச்சி-1 செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பேச்சில் இனிமை, கொள்கையில் தெளிவு, செயலில் உறுதி இம் மூன்றும் உள்ளவர் எதையும் சாதிக்கலாம். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடபுலத்துத் தேர்தல் தேவலோகத்தில் மாநாடு

வடக்கு மாகாணத்தின் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் தேவலோகத்தில் இந்திரன் தலைமையில் மாநாடு கூடியது.

மாநாட்டில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் விடுத்த அறிக்கை தொடர்பில் ஆராயப்பட்டது.

**இந்திரன்:** சித்திரகுப்தா வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் விடுத்த அறிக்கை எப்படி இருக்கிறது.

**சித்திர:** சுவாமி! முதல்வரின் அறிக்கை செய்யுள் வடிவில் உள்ளது. *(சபையில் சிரிப்பு)*

**இந்திரன்:** என்ன? செய்யுள் வடிவில் இருக்கிறதா? அப்படியானால் இதற்குப் பதவுரை எழுத வேண்டும். யார் பதவுரை எழுதக் கூடியவர்கள்.

**சித்திர:** சுவாமி திருக்குறளுக்கு பொருள் எழுதிய தமிழகத்து அறிஞர் டாக்டர் மு.வரதராசனார் தேவலோகத்தில்தான் இருக்கிறார். அவரை அழைத்தால் சிலவேளை பொருள் கூறலாம்.

**பிரம்மா:** இந்திரா! வடக்கின் முதலமைச்சர் தனது அறிக்கையை செய்யுள் வடிவில் விடுத்ததற்கு இரண்டு காரணம் உண்டு. அதாவது தேர்தலுக்கு முன்னதாக அறிக்கை விட வேண்டும். மற்றையது தமிழ் மக்கள் யாரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதைக் கூறியாக வேண்டும்.

**இந்திரன்:** பிரம்ம தேவரே முதல்வரின் அறிக்கையின்படி யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது தெட்டத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதா?

**பிரம்மா:** இந்திரா வடக்கின் முதல்வரின் அறிக்கையில் இருந்து ஒரு விடயத்தை உய்த்துணர முடிகிறது. அதாவது மிளகாய்த்தூள் அரைப்பதற்குத் தேவையான மிளகாயை வாக்குகின்ற கடையில்தான் நல்ல மல்லி இருக்கும் என்றில்லை.

ஆக, தூளுக்குத் தேவையான மிளகாயை ஒரு கடையிலும் மல்லியை இன்னொரு கடையிலும் வாங்கலாம் என்றுதான் வடக்கு முதல்வரின் அறிக்கை சொல்கிறது.

**யமன்:** பிரம்ம தேவரே! நீங்கள் சொல்வதும் புரியவில்லை.

**பிரம்மா:** யமதர்மராஜா, முதல்வரின் அறிக்கையில் ஒரு விடயம் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. அதாவது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளனர்–ஏமாற்றுகின்றனர். ஒரு கட்சிக்குள்ளேயே ஒற்றுமையில்லாத நிலைமை காணப்படுகின்றது.

எனவே தமிழ் மக்கள் சரியான–நேர்மையான பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வேண்டும். தமிழ் மக்களுக்கு உதவக்கூடிய–நம்பிக்கையான வேட்பாளர்கள் வெவ்வேறுபட்ட கட்சிகளில் இருந்தால் அவர்களுக்கு வாக்களித்து அவர்களைப் பாராளுமன்ற உறுப்பினர்களாக்கி, தமிழ் இனத்திற்கு ஆரோக்கியமான ஒரு சூழலை உருவாக்க வேண்டும் என்பதுதான்.

அதாவது தூளுக்குத் தேவையான மிளகாயை வாங்கும் கடையில்தான் மல்லியையும் வாங்க வேண்டும் என்று நினைக்காதீர்கள். இந்தக் கடையில் நல்ல மிளகாயும் அந்தக் கடையில் நல்ல மல்லியும் இருந்தால் அவற்றை அங்கங்கு வாங்குங்கள். மிளகாய் வாங்கும் கடையில்தான் மல்லி வாங்க நினைத்தால், பழுதான மல்லியும் கிடைக்கலாம்.

மிளகாய் நல்லதாயினும் பழுதான மல்லி மிளகாய்த்தூளை நாசமாக்கிப் போடும். ஆகையால் தூள் நல்லதாக இருக்க வேண்டுமாயின் நல்ல மிளகாய், நல்ல மல்லி என்பவற்றைப் பார்த்து வாங்க வேண்டும் என்பதே வடக்கு முதல்வரின் கருத்து என நான் நினைக்கின்றேன்.

**இந்திரன்:** பிரம்ம தேவர் கூறிய கருத்துக்கு நன்றி. எனினும் வடக்கின் முதல்வர் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை வெளிப்படையாகக் கூறியிருக்கலாம்.

**நந்திதேவர்:** சுவாமி வெளிப்படையாகக் கூறுவது நயத்தக்க நாகரிகம் இல்லை என்று அவர் கருதியிருக்கலாம். எதுவாயினும் தூளுக்காக மிளகாயையும் மல்லியையும் பதமாக வறுக்க வேண்டும். அதையும் தமிழ் மக்கள் சிறப்பாகச் செய்வர் என இந்த மாநாடு நம்புகிறது.

# பிதிர்க்கடன் செலுத்துகின்ற ஆடி அமாவாசை விரதம்

இன்று ஆடி அமாவாசை விரத நன்னாள். இந்த விரதம் தந்தையின் ஆத்மா உய்திபெற நோற்கப்படும் ஒரு புண்ணிய விரதமாகும். இவ்வுலகில் எம்மைத் தோன்றவைத்து ஓர் ஆளாக்கி எமை நல்வாழ்வு வாழவைக்கப் படாத பாடுபட்ட நல்மனிதர் எமது தந்தை யாவார். அந்தத் தந்தையானவர் இவ்வுலக வாழ்வை நீத்து இறந்த காலத்தில் தந்தையின் பிதிர் நல்லிடம் சேர்ந்து அமைதியுற்றுச் சிறப்புற இவ்விரதம் அனுட்டிக்கப்படுகின்றது.

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை அதாவது தந்தையை ஏத்தி ஏத்தித் தொழுதல் நியாயமான செயற்பாடாகும். அதாவது இவ்வுலகில் நாம் நல்ல நிலையில் வாழவும் மங்களம் நிறைந்த சுகவாழ்வில் திளைக்கவும் செய்தவர் எமது தந்தையாவார். அவரது ஆத்மாவுக்கு நாம் நிச்சயம் நன்றி செலுத்துதல் வேண்டும்.

அதற்காகத்தான் இந்த ஆடி அமாவாசை விரதம் அனுட்டிக்கப்படுகின்றது. இவ்விரதம் அனுட்டிப்பவர்கள் ஏதாவது ஒரு புனித புண்ணிய தீர்த்தத்தில் நீராடித் தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து சந்தியாவந்தனம் முடித்து, பிராமணர் ஒருவரைக்கொண்டு தர்ப்பை எடுத்து இறந்த தந்தைக்குப் பிதிர்க்கடன் செலுத்தி எள்ளும் தண்ணீரும் இறைத்து வழிபட்டுக்கொண்டு அரிசி, காய்கறி, பருப்பு முதலியவற்றைத் தானமாகக் கொடுத்துப் புண்ணியத்தைத் தேடிக் கொள்ளவேண்டும்.

அமா என்பது ஓரிடத்திற் பொருந்தியது, குவிந்தது, அடுத்தது என்று பொருள்படும். சூரியனும் சந்திரனும் ஓர் இராசியிற் சஞ்சரித்து உறவாடும் நாளே அமாவாசை என்று அழைக்கப்படுகிறது.

பொதுவாக இந்த உலகம் இயங்குவதற்கு சூரியனே மூலகாரணர். சந்திரன் மகிழ்ச்சிக்கும் இன்பத்திற்கும் தெளிந்த அறிவுக்கும் தலைவர். இதைப் பெறுவதற்கு அமாவாசை விரதமே வழிவகுக்கும். அபுத்திபூர்வமாகச் செய்த வினைகள் அந்தியேட்டி, தகனக் கிரியைகளால் மாறும். புத்திபூர்வமாகச் செய்த வினைகள் அனைத்தும் நாம் அனுபூதியடைந்து நல்ல நிலையில் அனுபவித்தேயாக வேண்டும். ஆகவே பிதிர்க்கடன் செய்யாது விடுதல் பாவமாகும்.

தந்தையோடு கல்வி போகும் என்பது முதுமொழி. ஆதலால் மிக்க அறிவான கல்விச் செல்வத்தை எமக்குத் தருபவர் தந்தையாரே. அவர் இல்லையேல் நாம் கல்வியில் முன்னேற்றம் காண்பதரிது. மனிதர்களுக்கு ஒருவருடம் தேவர்களுக்கு ஒருநாள் என்ற கணக்கில் தைமாதம் முதல் ஆனி ஈறாக வருகின்ற ஆறுமாதங்களும் பகற்பொழுதாகும். இதனை உத்தராயண காலம் என அழைப்பர். ஆடி மாதம் முதல் மார்கழி ஈறாக வருகின்ற ஆறுமாதங்களும் தேவர்களுக்கு இரவுப் பொழுதாகும். இதனைத் தக்ஷணாயன காலம் என்று அழைப்பர். இதனாலேயே ஆடி அமாவாசை பிதிர்க்கடன் செலுத்துகிற நாளாகக் கருதப்படுகின்றது.

கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்

## நான் சிறை சென்றாலும் தந்தை பிரதமராவதை தடுக்க முடியாது

### நாமல் சூளுரை

(கொழும்பு)

நிதி மோசடி விசாரணை பிரிவுக்கு அல்ல என்னை சிறைக்கு அனுப்பினாலும், எனது தந்தை இந்நாட்டின் பிரதமராவதனை தடுக்க முடியாதென அம்பாந்தோட்டை மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளம் பெண்கள் கருக்கலைப்பு, போதைப் பொருள் மீட்பு என பத்திரிகையில் பெரிதாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. இவை தான் இன்று நாட்டிற்கு ஏற்பட்டுள்ள நிலைமை.

இவை மிகவும் ஆபத்தானவைகள், இளம்தலைமுறையினர் போதைப் பொருளில் மூழ்கடிக்கப்பட்டுள்ளனர்.

வரலாற்றில் இந்த மாதத்திலேயே அதிகளவான எதனோல் கொண்டு வரப்பட்டுள்ளது. இவர்கள் நாட்டின் கலாசாரத்தை அழிக்கின்றார்கள்.

மிஹிந்து தேரர் எங்களுக்கு கற்று கொடுத்த கலாசாரம், புத்த மதம் போன்றவைகளை பாதுகாத்து எங்கள் சமூகத்தை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும்.

அவ்வாறு கலாசாரங்களை மதிக்கும் வகையில் எங்கள் பிள்ளைகளை வளர்க்க வேண்டும்.

எனவே எதிர்வரும் 17ஆம் திகதி வெற்றிலைக்கு வாக்களியுங்கள் என நாமல் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 5 ஆண்டுகள் விடுமுறை சாத்தியமற்ற வாக்குறுதி

### மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு 5 ஆண்டுகள் விடுமுறை வழங்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி வழங்கியுள்ள வாக்குறுதி பொய்யானது என முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட முதன்மை வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் அரச ஊழியர்களுக்கு 5 வருட விடுமுறையை எடுத்துக் கொள்ள இடமளிப்பதாக கூறுகிறது. இது நடக்காத ஒன்று.

இதற்கு பதிலாக ஊழியர்களின் பதவி உயர்வு மற்றும் தொழிலை இல்லாமல் செய்ய முயற்சித்து வருகின்றனர் எனவும் மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார். (இ)




### அதிகமாக தூங்காதே

★ பிறரை நன்மை செய்யத் தூண்டுங்கள். அதிலும் உங்களுக்கு நன்மை உண்டு. பிறர் செய்யும் தீமையை விட்டு தடை செய்யுங்கள். அதிலும் உங்களுக்கு நன்மை உண்டு.

★ தந்தையின் உடன்பிறப்பு சிறிய தந்தை, தாயின் உடன்பிறப்பு சிறிய தாய் இருவரும் தாய், தந்தைக்கு நிகரானவராகும்.


★ குறையாக இருந்தாலும் தொடர்ந்து செய்யக்கூடிய நற்செயல்களே அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமாக இருக்கும்.

★ நன்மை என்பது நல்லகுணம். தீமை என்பது உள்ளத்தில் மறைந்திருக்கும் கபடம். கபடத்தை பின்பற்றாதீர்கள்.

★ அதிகமான தூக்கம் உள்ளத்தை மரணிக்கச் செய்யும். அதனால், கவலைகள் உண்டாகும்.

★ கண்ணில்லாத குருடர்களுக்கு உதவி செய்பவரின் 100 குற்றங்கள் மன்னிக்கப்படும்.

★ மலர்ந்த முகத்துடன் இருப்பீராக! மலர்ந்த முகத்தவரை அல்லாஹ் நேசிக்கின்றான். கடுகடுத்த முகத்துடையவர்களை வெறுக்கின்றான்.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய ஒரே விடயம்

நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டிய ஒரேவிடயம் நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்பதே. இதை மறக்கும்போது நீங்கள் துயரம் அடைகிறீர்கள்.

துயரம் என்பது,

உங்களுடைய குறைகள் மேல உங்களுக்குள்ள பற்று

உங்களுடைய நல்ல குணங்கள் மேல் நீங்கள் கொண்டுள்ள பற்று

உங்களுடைய குறைகள் உங்களுக்குத் துயரத்தைத் தருகிறது. உங்களை நீங்கள் மிக உயர்ந்தவர் என்று எண்ணும்போது மற்றவர்களை குறை சொல்லத் தொடங்குகிறீர்கள். இதுவும் உங்களுக்குத் துயரத்தைத் தருகிறது.

துயரத்தின் நோக்கம் உங்களை மீண்டும் ஆன்மாவிற்குக் கொண்டு வருவது அது இன்பமயம். ஆனால் இதை உணருவது ஞானம்- விழிப்புணர்வின் வாயிலாகத்தான் முடியும். ஞானம், துயரத்தை ஆன்மாவிடம் வழிநடத்திச் செல்கிறது. ஞானம் இல்லையென்றால் துயரம் முற்றுப் பெறுவதில்லை. பதிலாக பல மடங்காக அதிகரிக்கிறது. ஞானம் துயரத்திற்கு முடிவை அளிக்கிறது.

ஞானத்தின் ஆற்றலைக் கொண்டு நீங்கள் துயரத்தைக் கடந்து அப்பால் போக முடிகிறது.

இப்பாதையில் உங்களுக்கு எல்லாம் இருக்கிறது. இந்த அழகான ஞானம் எல்லாச் சுவைகளையும் கொண்டு முழுமையாக இருக்கிறது. விவேகம், சிரிப்பு, சேவை, மௌனம், பாடல், ஆடல், கொண்டாட்டம், யக்ஞங்கள், தற்கட்டுக்கள்!, பிரச்சினைகள்!, சிக்கல்கள்!, பிறகு எல்லாவற்றிற்கும் சுவை சேர்க்கப் பெருங்குழப்பங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



X 3

பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2015
ஐக்கிய தேசியக் கட்சி
மாபெரும் தேர்தல் பிரசார பொதுக் கூட்டம்

இடம்: புதுறோட் காரைநகர்
காலம்:-14.08.2015 வெள்ளிக்கிழமை
பி.ப 5.30 மணி

இப் பொதுக் கூட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளரும் முன்னாள் பிரதி அமைச்சர் **விஜயகலா மகேஸ்வரன்** சிறப்புரை ஆற்றுவதுடன் ஏனைய வேட்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றவுள்ளனர். அமரர் கௌரவ அமைச்சர் மகேஸ்வரன் வழியில் சேவையாற்ற மீண்டும் அவரது அணியை பாராளுமன்றம் அனுப்புவோம். இந்நிகழ்வில் **ராகம்ஸ்** இசைக்குழுவுடன் இந்திய இசைக் கலைஞர்கள் பங்கு கொள்ளும் மாபெரும் இசைக் கச்சேரியும் இடம்பெறும்.

அனைவரும் வருக; ஆதரவு தருக.

காரை வாழ் மக்கள்

(சி-548)


## தேர்தலில் வெற்றி...

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி பெற்றால் இதுவரை பிரதமர் பதவி வழங்கப்படாத ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவருக்கு அந்த பத்வி வழங்கப்படுவது அவசியமென தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன,

அதற்கு ஒத்துழைப்பை வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்வதற்காகத்தான் முன்னின்று செயல்படத் தீர்மானித்திருந்ததாக அந்தக் கடிதத்தில் கூறியிருக்கும் மைத்திரி, மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்ததால், இந்தத் தீர்மானத்தைத் தான் கைவிட்டதாக கூறியிருக்கிறார்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் க்ட்சி பிளவுபடுவதைத் தடுப்பதற்காகவே தான் இவ்வாறு பின்வாங்கியதாக கூறியுள்ள ஜனாதிபதி மைத்திரி, மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்த்திருந்தால் கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது தனக்கு ஆதரவளித்த சிறுபான்மை கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவளிக்கும் வாய்ப்புகள் இருந்ததாகவும் குறிப்பிட்டார்.

ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில கட்சிகளின் விருப்பத்திற்கு அமைய மகிந்த ராஜபக்ஷ செயற்பட்டதால், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஆதரவை ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மைத்திரி விசனம

31ஆம் பக்கம் பார்க்க...


பட்டம் : நேர்மை, தகைமை, சேவை


தந்தை செல்வா
அ. அமிர்தலிங்கம்
ஜி.ஜி. பொன்னம்பலம்
மு. சிவசிதம்பரம்


இது வேறு பாதை...
தமிழ்த் தேசியம், சுயநிர்ணய உரிமை ஓயாது!
தேசியக் கட்சிகள் எம் உரிமைக்கு துணைபோகா!
தனிக்கட்சி ஆதிக்கம் இங்கு விடையல்ல!
மாற்றத்திற்கான நேரம் இது...
நேர்மை, உரிமை, அரசியலை முன் நிறுத்துவேன்!
போதைவஸ்து ஒழிப்பு என் கடமைகளில் ஒன்று!

சுயேட்சைக் குழு - 5
X 3
வீ. ஆ. ஜெயசங்கரி B.A.
(Public Administration & Governance /அரச நிர்வாகமும் ஆட்சியும்)


(151)



பாராளுமன்றத் தேர்தல் - 2015

- தமிழினத்தின் தன்மானம்
- தமிழினத்தின் நம்பிக்கை
- தமிழினத்தின் உரிமைக் குரல்

10 X


சிவஞானம் சிறீதரன்
M.Ed,B.A,PGDE(Mt), PGDEM,Sp.Tr(Ag)

TNA Tamil National Alliance தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

X 10

இலங்கை தமிழ் அரசுக்கட்சி
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்

நாச்சிக்குடா முழங்காவில் வர்த்தகர் சமூகம்



பாராளுமன்றத் தேர்தல் - 2015

- தமிழினத்தின் தன்மானம்
- தமிழினத்தின் நம்பிக்கை
- தமிழினத்தின் உரிமைக் குரல்

10 X



சிவஞானம் சிறீதரன்
M.Ed,B.A,PGDE(Mt),PGDEM,Sp.Tr(Ag)
உங்கள் வாக்கு தமிழினத்தின்
உண்மையான, நேர்மையான, மாசற்ற
நம்பிக்கை நட்சத்திரம்
சிவஞானம் சிறீதரனுக்கு

X 10

TNA Tamil National Alliance தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

இலங்கை தமிழ் அரசுக்கட்சி
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்

யாழ்.- கிளிநொச்சி மக்கள்

(சி-545)



பாராளுமன்றத் தேர்தல்-2015


உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோராவர்
கப்பலில் உணவைக் கொண்டு
வந்து தமிழ் மக்களின் உயிர் காத்த
டக்ளஸ் தேவானந்தா
அவர்களுக்கே உங்கள் வாக்கு

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி

X 4

மானிட மேம்பாட்டு மையம்
வடக்கு மாகாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலில் வெற்றி...

வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள சுதந்திரக் கூட்டமைப்பு 113 ஆசனங்களை பெற்று வெற்றியீட்டினால் பிரதமர் பதவியை இதுவரை வகிக்காத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு மூத்த உறுப்பினருக்கு வழங்குவது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் தற்போது நிமல் சிறிபால டி சில்வா, ஜோன் செனிவிரத்ன, எ.எச்.எம். பவுசி , அத்தாவுட செனிவிரத்ன, சமல் ராஜபக்ஷ, சுசில் பிரேம ஜயந்த, அனுர பிரியதர்ஷன யாப்பா ஆகிய மூத்த தலைவர்கள் இருக்கின்றனர் என்பதை கடிதத்தில் காட்டியுள்ளார்.

எதிர்வரும் தினங்களில் இனவாதத்தைத் தூண்டும் கருத்துக்களை கூறுவதைத் தவிர்க்க வேண்டுமென மகிந்தவிடம் கோரிக்கை விடுத்துள்ள மைத்திரி, ஸ்ரீலங்கா சுதநதிரக் கட்சியை பிளவு படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ளு மாறும் அந்தக் கடிதத்தில் கோரியுள்ளார். (செ-11)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் **தவமணி கந்தசாமி**
குமிழங்குழி, காரைநகர்



இவ்வுலகில் 19 - 03 - 1953
இறையுலகில் 15 - 07 - 2015

2015.07.15 இல் இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டதும் நேரிலும், தொலைபேசி வாயிலாகவும், தபால் மூலமாகவும் துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் , பத்திரிகை வாயிலாகவும், பதாகைகள் மூலமாகவும், துண்டுப் பிரசுரமாகவும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், மலர் வளையம் வைத்தவர்களுக்கும், வைத்தியசாலையில் அன்னாருக்கு சிறந்த முறையில் சிகிச்சையளித்த வைத்திய நிபுணர்களுக்கும், பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் அவரது அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று அன்னாரினது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்**
**மக்கள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்**

176, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-1801)

## கண்ணீர் அஞ்சலி

யா/ இந்து மகளிர் கல்லூரியின்
அலுவலக முகாமைத்துவ உதவியாளர்
திருமதி விக்கினேஸ்வரி சிவலோகநாதன்,
பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்
செ. சண்முகலிங்கம் ஆகியோரின் தாயார்
திருமதி நவமணிதேவி செல்லையா
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம். (C-1802)

பாடசாலைச் சமூகம்
யா/ இந்து மகளிர் கல்லூரி

## பாராளுமன்ற தேர்தல் - 2015
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்



இவர்தான் அவர்
8
சில்வேஸ்திரி அலென்ரின்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி



X 8

(134)

## விற்பனையாளர் தேவை

எமது புடைவை நிறுவனத்துக்கு A/L படித்த புடைவை அனுபவமுள்ள ஆண் / பெண் பணியாட்கள் தேவை. நேரில் வரவும். (1491)

சிவகணேசன் ரெக்ஸ்
41, பெரிய கடை , யாழ்ப்பாணம்.

மீண்டும் O/L உடன்
UK, Australia, New Zealand, Switzerland, Canada, France, Germany, Singapore, Malaysia
மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்கக்கூடிய
Business & Hotel Management
3 ஆம் அணி
யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பித்து 6 மாதங்களில் விரும்பிய நாடு செல்லும் விசா உத்தரவாதம்!



SEGi University & Colleges | B.H.M.S. Business & Hotel Management School | nmit | William Angliss Institute
MALAYSIA | SWITZERLAND | NEW ZEALAND | AUSTRALIA

அனுமதிகளுக்கு 077 3616 798 021 222 0011
கற்கைநெறி ஆரம்பம் 27-08-2015 வியாழன் 10 மணி

- அடிப்படையிலிருந்து IELTS வரையான விசேட ஆங்கிலக் கற்கைநெறி
- வெளிநாட்டு தூதரக விசா நேர்முகத் தேர்வுக்கான தயார்ப்படுத்தல் பயிற்சி
- பொருத்தமான நாடு, பல்கலைக்கழகம், தொழில் தெரிவுக்கான விரிவான வழிகாட்டல் ஆலோசனைகள்
- கற்கைநெறிக் காலத்திலேயே விரும்பிய நாடு செல்வதற்கான விசா ஒழுங்கு
- பல்கலைக்கழக கட்டணம் மற்றும் வங்கி வைப்புக்கான வங்கிக் கடன் ஏற்பாடுகள்
- வேறு துறைகளில் கற்க விரும்பும் மாணவர்களுக்கும் பகுதி நேர வேலைவாய்ப்புக்கு உதவும்

வெளிநாடு செல்ல விரும்பாதோருக்கு யாழ். கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்து தருகிறோம்.

SIKARAM Any Visa to Any Country
Sikaram (Pvt) Ltd.
இல.275-2/1. மணிக்கூட்டுக்கோபுர வீதி. யாழ்ப்பாணம்.(வைத்தியசாலை பின்புறம்)

(சி-1796)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## பாராளுமன்றத் தேர்தல் - 2015





அமையப் போகும்
புதிய அரசில்
எங்களுக்கும் ஓர்
அமைச்சர்



- உரிமைகளை வென்றிட
- வேலைவாய்ப்புகளைப் பெற்றிட
- பிரச்சினைகளை அரசுக்கு தெரியப்படுத்த

திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்கு
வாக்களியுங்கள்



X 3

(சி-547)

யாழ். மாவட்ட மக்கள்

## 10 ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 19-12-1949
இறப்பு 03-08-2005

அமரர்
**நடேசன் வசந்தகுமார்**
(முன்னாள் உதவி சுங்க அத்தியட்சகர் சுங்க திணைக்களம்)

திதி :- அபரபட்ச சதுர்த்தி

பறந்தோடி வந்ததையா பத்தாண்டு
நினைவலைகள்... பக்கத்தில் பார்த்திருந்தாய்
பரவசமாய் நாமிருந்தோம்... துக்கத்தில்
எமை ஆழ்த்தி தூரதேசம் சென்றதெங்கே?
நல் ஆளுமை கொண்ட அதிகாரியாக
ஆற்றலுடன் திகழ்ந்தீர், பங்கமின்றி பணி
புரிந்தீர் சுங்க லாகா தனில்...
இங்கிதமாகவே இயங்கிய எங்கள்
இல்லத்தின் தலைமகனே எங்குற்றீர்
ஏங்குகின்றோம்...
பாசமழை மொழிந்து நேசமுடன்
எமை வளர்த்து பக்குவமாகவே கல்வி
தனை புகட்டி வைத்து வையத்துள்
வாழ்வாங்கு நாம் வாழ வழி சமைத்த
முத்தான எம் சொத்தே!
பித்தாப்பிறை சூடியோன் பொற்பாதக்
கமலங்களில் நின் ஆன்மா இளைப்பாற
எந்நாளும் வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(1490)

வ.குமரதீபன் (யாழ் பல்கலைக்கழகம்)
குடும்பத்தினர்.
077-7666 394


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.